உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 33 | ஆனந்த - வைகாசி - 10—6—74 | இதழ் 7

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. - சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## பெருஞ்சாந்தி காண்போம்

"மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் இரண்டு" என்பதை ஞானசம்பந்தர் திருமயிலையில் மெய்ப்பித்தருளினமையைச் சேக்கிழார் அழகுபட விளக்கினார். அவ் இரண்டில், ஒன்று சிவனடியார்களுக்குத் திருவமுது படைத்தல்; மற்றொன்று சிவபெருமானது நல்ல திருவிழாக்களைக் கண்குளிரக் கண்டு மகிழ்தல்.

நாள் விழா, வார விழா, பட்ச விழா, மாத விழா, ஆண்டுப் பெருவிழா முதலாக விழாக்கள் பல வகைப்படும். மற்றும் சிறப்பு நாட்களில் நிகழும் விழாக்களும் பல. இவற்றுள் மாத விழாப் பலவற்றை ஞானசம்பந்தர் தமது பூம்பாவைத் திருப்பதிகத்தில் எடுத்தோதியருளினார்.

விழாக்கள் எல்லாவற்றினும் மிக மேலானது பெருஞ்சாந்தி விழா. இதுவே, 'குடமுழுக்கு, பெருங்குட முழுக்கு - கும்பாபிடேகம், மகாகும்பாபிடேகம்' என்றெல்லாம் வழங்கப்படுகின்றது. திருக்கோயில்களில் அருள் விளக்கத்தை (தெய்வ சாந்நியத்தை) உண்டாக்குவது பெருஞ்சாந்தி விழாவே. அதனால்,

இது மற்றைய எல்லா விழாக்களினும் மிக மேலானதாகின்றது. ஆகவே, மண்ணினிற் பிறந்த பயனைப் பெற வேண்டுவோர் பலரும் இப்பெருஞ்சாந்தி விழா எங்கு நிகழினும் அங்குச்சென்று கண்டு வணங்கவேண்டுதல் இன்றியமையாதது. இது பற்றியே ஞானசம்பந்தர், இளவயதிலே மறைந்துபோன பூம்பாவையைத் திருவுள்ளத்தால் நோக்கி, "பெருஞ்சாந்தி காணுதே போதியோ பூம்பாவாய்" என வினவி அழைத்தார். இத்தகைய பெருஞ்சாந்தி விழா மதுரையில் நிகழ இருப்பது பலர்க்கும் மகிழ்ச்சியைத் தருகின்ற ஒன்றாகும்.

மதுரை, பழமைமிக்க ஒரு மாநகர்; சிறந்த சிவத்தலம். சங்க காலத்தில் தமிழ் வளர்ந்த இடமும், சமய காலத்தில் சைவம் தழைத்த இடமும் இம்மதுரை மாநகரமே. தமிழ்நாட்டு முடியுடை மன்னர் மூவருள் பாண்டியர் பலர் வழிவழியாக அரசு வீற்றிருந்து அறநெறியும், அருள் நெறியும் தழைக்க ஆட்சி செலுத்திய கோநகர் மதுரை. அப்பாண்டியருள் ஒருவனுடைய மனைவி முற்பிறப்பிற் செய்த தவம் காரணமாகச் சிவபெருமான் உமாதேவியை அவ்விருவர்க்கும் மகளாகத் தந்து, தாமும் மருகராய் எழுந்தருளி முடிபுனைந்து நெடுங்காலம் மதுரையில் அருளரசு செலுத்தினர்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றலும் சிறப்புற்று விளங்குவது மதுரைத் திருத்தலம் என்பதைத் திருவிளையாடற் புராணம் நன்கு விளக்குகின்றது. 'இங்குள்ள இலிங்க மூர்த்தியே மற்றைய இலிங்க மூர்த்திகளுக்கெல்லாம் மூல மூர்த்தி - சுயம்பு (தானே தோன்றிய) மூர்த்தி' என்பதும் அப்புராணத்தால் அறியப்படுவது. "மூனைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" என்னும் அப்பர் திருவாக்கும் இதனை வலியுறுத்துவதாய் உள்ளது. அழகு மிகுதியால் 'சொக்கர்' எனவும், 'சுந்தரர்' எனவும் பெயர் பெற்று விளங்கும் இம் மூர்த்திக்கு, எட்டு யானைகளால் தாங்கப்படுகின்ற விண்ணிழி விமானத்தை இந்திரன் அமைத்துள்ளான். அவன் பூசை செய்து பேறு பெறப் பொன்னலரகிய தாமரை மலரைத் தந்த பொற்றாமரைத் தீர்த்தம் திருக்கோயிலில் தெய்விகத்துடன் திகழ்கின்றது.

இத்தீர்த்தத்திலேதான் தருமையாதீன ஆதிபரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தருக்குச் சொக்கலிங்கப் பெருமான் கண்ணுக்கினிய பொருளாகி அவர்தம் கரத்தில் எழுந்தருளியதோடு கருத்திலும் இடங்கொண்டு ஆன்மார்த்த மூர்த்தியாய் அவரது ஞானபூசையை ஏற்றருளினன். ஸ்ரீ குருஞானசம்பந்தர் தம்

ஆன்மார்த்த மூர்த்தியைத் துதித்த சொக்கநாத வெண்பாவில் அம்மூர்த்தியை, அப்பர் அருளிச்செய்தவாறே,

> " ஆலந் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
> மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம் — பாலொளியாம்
> மத்தனே கூடல் மதுரா புரிஉமையாள்
> அத்தனே ஆலவா யா "

என்று அருளினர். தருமையாதீனத்தின் ஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்கலிங்கப் பெருமானையே ஆதீன குருமகாசந்நிதானங்களின் அருள்பெற்ற அன்பர்களும் அன்றுமுதல் இன்றுவரை ஆன்மார்த்த மூர்த்தியாகக்கொண்டு வழிபட்டு இருமை இன்பமும் எய்தி வருகின்றார்கள்.

இறைவன் திருநடனம் செய்யும் பஞ்சசபைகளில் மதுரை 'இரசத சபை' எனப்படுகின்ற வெள்ளியம்பலமாகும். தில்லை, கனகசபையாகிய பொன்னம்பலம். பொன் அருமையானது. வெள்ளி எளிமையானது. அவ்வாறே பொன்னம்பலத்தில் உள்ள பெருமான் அருமையுடையவன். வெள்ளியம்பலத்தில் உள்ள பெருமான் எளிமை யுடையவன். இவற்றை முறையே பெரிய புராணத்தாலும், திருவிளையாடற் புராணத்தாலும் அறியலாம்.

பொன்னம்பலத்தில் 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுக்கப் பாடப்பெற்ற பெரியபுராணம், அப்பொன்னம்பலப் பெருமானது சிறப்பையே கூறுதல் காணலாம். திருவிளையாடற் புராணம் வெள்ளியம்பலப் பெருமானது புகழையே கூறுதல் வெளிப்படை. பெரிய புராணத்தில் சொல்லப்பட்ட வரலாறுகள் பலவும் நாயன்மார்கள் செயற்கருஞ் செய்கைகளைச் செய்தே பொன்னம்பலவனை அடைந்தமையை விளக்கும். வெள்ளியம்பலவன் விறகாளாகி விறகு சுமந்தும், பன்றிக்குட்டிகட்குத் தாய்ப் பன்றியாய்ச் சென்று பால்கொடுத்தும், கரிக்குருவிக்கு உபதேசம் செய்தும், நாரைக்கு முத்திகொடுத்தும், மற்றும் இன்னோரன்ன பல திருவிளையாடல்களால் மிக எளியனாய் அருள்புரிந்தான். பொன்னம்பலவனை அடைந்த அடியார்கள் அறுபத்து மூவர். வெள்ளியம்பலவன்செய்த திருவிளையாடல்கள் அறுபத்துநான்கு. அருமை, எளிமை இரண்டுமே இறைவன் இயல்புகளாம். "காண்டற்கரிய கடவுள்கண்டாய் - கருதுவார்க்கு ஆற்ற எளியான் கண்டாய்" என்னும் அப்பர் வாக்கு இறைவனது இரண்டியல்புகளையும் விளக்குகின்றது.

சிதம்பரம் விராட் புருடனுடைய இருதயத்தானம். மதுரை அவனது துவாதசாந்தம் - சிரசிற்குப் பன்னிரண்டங்குலத்திற்கு

மேல் உள்ளது எனவே, பொன்னம்பலவன் நடிப்பது இருதயத்திலும், வெள்ளியம்பலவன் நடிப்பது துவாதசாந்தத்திலும் ஆகின்றன. வெள்ளியம்பலப் பெருமான் ஒரு பாண்டியனது வேண்டுகோளுக்கு இரங்கிக் கால்மாறி ஆடினமையால், பொன்னைவிட வெள்ளிக்குக் கால்மாற்று அதிகம்’ என்று நயம்படக் கூறுவார்கள். இன்ன பல சிறப்புக்கள் வாய்ந்ததும், தமிழுக்கும், சைவத்திற்கும் சிறப்பிடம் ஆனதும் ஆகிய மதுரையில் அங்கயற்கண்ணியோடு உடனுறைய ஆலவாய்ச்சொக்கர் திருக்கோயிலில் பெருஞ்சாந்தி விழா நடைபெறுகின்றது என்றால் அதனை அனைவரும் சென்று கண்டு வணங்கி அகமகிழ வேண்டுதல் இன்றியமையாததன்றோ!

திருக்கோயில்களில் பன்னிரண்டாண்டிற்கு ஒருமுறை மகா கும்பாபிடேகம் நடைபெற வேண்டுதல் அருள் விளக்கத்திற்கு இன்றியமையாதது. அம்முறைப்படி மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசர் ஆலயத்தில் 1963-ல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று 1974-ல் மீண்டும் நடைபெறுதல் மகிழ்ச்சிக்கு உரியது.

1963-ல் நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தில் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் சுவர்ணபந்தனம் சாத்துதல் முதலியவற்றை உடன் இருந்து செய்வித்துத் தரிசித்து மகிழ்ந்தார்கள். இதுபொழுது 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 26—5—74 அன்று, முதல்முதலாக மதுரைக்கு எழுந்தருளியபொழுது திருப்பணிக்கு ரூபாய் 12,501 அருட்கொடையாக அளித்து, இம்மகாகும்பாபிஷேகத்திற்கும் எழுந்தருளுகின்றார்கள். ஆகவே, 26—6—74-ல் நிகழும் இப்பெருஞ்சாந்தி விழாவிற்கு அனைவரும் செல்வோம்! சென்று காண்போம்! கண்டு வணங்கிக் குருவருளாலும், திருவருளாலும் இம்மை மறுமை நலங்களை எல்லாம் இனிது பெற்று உய்வோமாக.

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் றன்னைத்
தூயானைத் தூவெள்ளை ஏற்றான் றன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருஆலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

திருச்சிற்றம்பலம்

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

[தமது] ஆன்மார்த்தமூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப்பெருமான்
தரிசனத்திற்கு
முதன்முறையாக 26—5—74 அன்று எழுந்தருளியபோது
மதுரைநகரப் பெருமக்கள் வரவேற்று வணங்கியபோது
வழங்கியருளிய

# வாழ்த்துரை

நித்தம் எழுந்தருளி நின்மலனே என்றனக்குப்
புத்தி மிகமிகவும் போதித்துச் — சித்தமயல்
போக்குவாய் இன்பசுக பூரணத்தி ரண்டறவே
ஆக்குவாய் சொக்கநா தா.

## திருவருட் செயல் :

இன்று சேக்கிழார் பெருமான் குருபூசைத் திருநாள். சைவம் என்னும் பெருங்கட்டிடத்தைஒழுங்குபடுத்திவளர்த்துக்கொடுத்த பெருமைக்குரியவர் சேக்கிழார்பெருமான். சைவ மரபைக் காத்து வளர்த்த பெருமைக்கும் உரியவர். அப்பெருமான் இறையடி சேர்ந்த சிறந்த நாளாகிய இப்புனித நாளில் தமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்கநாதப்பெருமானைத் தரிசிக்கும் பேறு நமக்குக் கிடைத்தது திருவருட்செயலால் கிடைத்த சிறப்பாகும்.

## சிறப்புக்கள் இரண்டு :

இம்மதுரைமாநகரத்திற்குப் பல சிறப்புக்கள் உள்ளன. அவற்றுள் மிக முக்கியமான சிறப்பு இரண்டு. அவை தமிழ் மக்களின் மொழியாகிய தமிழையும், தமிழர்களின் பழம்பெரும் கொள்கையாகிய சைவத்தையும் காத்து வளர்த்துக் கொடுத்ததும் கொழிதமிழ்ப் பெருமையை ரேனலறிய வாய்ப்பளித்ததும் ஆகும்.

## தமிழும் சைவமும் :

ஆலவாயண்ணல் இவ்விரண்டையும் பாதுகாத்துப் பரப்பியருளினன். அதனுல், அப்பெருமானையே ஆன்மார்த்த மூர்த்தியாகக் கொண்டிலங்கும் தருமையாதீனமும் தனது குறிக்கோளுரையாக 'சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக'. என்பதையே கொண்டுள்ளது. தருமையாதீனம் கடந்த நானூறு ஆண்டுக்காலமாகச் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க அரும் பணியாற்றி வருகிறது என்பதை நாடு நன்கறியும்.

## சிறந்த எடுத்துக்காட்டு :

வெப்புநோய் வாதத்திலும் அனல்புனல் வாதங்களாகிய வற்றிலும் சமணர்களை வென்று சைவ சமயந்தான் தலையாய தெய்வநெறிக் கொள்கையை உடையது என்பதை மதுரையில் இறைவனின் திருவருள் துணைகொண்டு ஆயிரத்துமுந்நூறு ஆண்டுகட்கு முன்னர்த் திருஞானசம்பந்தர் நிலைநாட்டினர். பிற சமயத்தவரோடு வாதஞ் செய்வதற்குத் திருஞானசம்பந்தர் தாமாக எந்த வாதத்திலும் தலையிடவில்லை என்பது எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டிய முக்கியமான செய்தி. வாதிற்கழைத்ததும், ஒருமுறைக்கு மும்முறை வாதஞ்செய்ததும், வாதில் தோற்றவர்கள் கழுவேற வேண்டும் என்ற முடிவெடுத்ததும் அமணர் செயலேயாகும். வலிய வந்த வாதத்தையும் (வம்பையும்) திருஞானசம்பந்தர் தாமே ஏற்றுக்கொள்ளவில்லை. வலிய வாதத்திற்கு வருகின்ற அமணர்களிடம் வாதுசெய்ய, இறைவனின் திருவுள்ளக்கருத்து யாது என்று வினவி, பிரார்த்தனை செய்து, இறைவனின் திருவுள்ளக் குறிப்பின் வழியே வாதத்தில் ஈடுபட்டார். இது நம்மனோர்க்கெல்லாம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

நாம் மத சம்பந்தமான சண்டை சச்சரவுகளில் ஈடுபடாமல் இருக்கவேண்டும் என்பதும், அதே நேரத்தில் நமது சமய நெறியில் பற்றும் பக்தியும் கொண்டு நடந்துகொள்ளவேண்டும் என்பதும், யாராவது வம்பு வழக்கிற்கு வருவார்களேயாகுல் இறைவன் திருவுள்ளக் குறிப்பறிந்து வழக்குகளில் வெற்றிகாண முயலவேண்டும் என்பதும் நமக்கு அவர் வழங்கும் அறவுரைகளாகக்கொள்ளத்தக்கன.

## தத்துவ நுட்பங்கள் :

பொதுவாக எல்லாச்சமயங்களும் நாட்டிற்கு வேண்டியனவேயாம். பள்ளிகளில் தொடக்கப்பள்ளி, உயர்தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரி முதலியன, பல்வேறு தரப்பட்ட

மக்களுடைய அறிவை வளர்க்கத் தேவைப்படுவனவே. அது போலவே பலதரப்பட்ட பண்பும், தரமும், தகுதியும் உடைய மக்களைத் தெய்வநெறியில் ஈடுபடுத்துவதற்குப் பல்வேறு சமயங்களும் இன்றியமையாதன என்பது ஊன்றி உணர்வார்க்கு நன்கு புலனாகும். இதனை உணராதவர்கள் சமயச்சச்சரவுகளிலும் சண்டைகளிலும் ஈடுபடுகின்றனர். சைவத்தைப் பொறுத்தவரை எல்லாச் சமயங்களிலும் கூறப்படுகின்ற தத்துவங்களோடு ஒத்து அவற்றுள் கூறப்பெறாத பல தத்துவ நுட்பங்களைத் தன்னுட் கொண்டிருக்கிறது. இவ்வுண்மையை நாயன்மார்களது வாழ்க்கை வரலாற்றுத் தத்துவ நுட்பங்களாலும், திருவிளையாடற் புராண வரலாற்று நுட்பங்களாலும் தெளிய உணரலாம்.

## பொன்னம்பலமும் வெள்ளியம்பலமும் :

இத்தலத்திற்கு ஏற்ப ஒன்றை நினைவு கூர்தல் பொருந்தும். நடராசப் பெருமான் - கூத்தப்பெருமான் கூத்து நிகழ்த்தும் ஐந்து சபைகளில் இம்மதுரைப்பதி வெள்ளியம்பலமாகத் திகழ்வது. வெள்ளியம்பலத்தில் அறுபத்துநான்கு திருவிளையாடல்களை நிகழ்த்தியருளினான். பொன்னம்பலத்தில் கூத்து நிகழ்த்தும் இறைவனே அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாற்றையும் நிகழ்த்தினான்.

## அருமையும் எளிமையும் :

பொன்னம்பலநாதனின் அருளை அறுபத்து மூன்று நாயன்மார்களும் அரிதில் பெற்றனரேயன்றி எளிதில் பெறவில்லை. மதுரை வெள்ளியம்பலவாணர், கரிக்குருவிக்கு உபதேசித்தும் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்தும் எளியவராய் ஆட்கொண்ட திறனைக் காண்கிறோம். எளிமையை மதுரையிலும் அருமையைத் தில்லையிலும் ஆண்டவன் அருளாலேயே உண்டாக்கினான் என்பதைப் பொன்னம்பலமும் வெள்ளியம்பலமும் காட்டி நிற்கின்றன. இறைவன் ஒருவனேயாயினும் எளிமையை இங்கும் அருமையை அங்கும் காட்டியிருப்பது அறிந்து மகிழத்தக்கதாகும். பொன் அருமையானது; வெள்ளி எளிமையானது. இங்கு பொன்னின் அருமையையும் வெள்ளியின் எளிமையையும் இணைத்துக்காண்பது இனிமை பயக்கிறது.

## திருவருட் பொருத்தம் :

வரவேற்புரையில் இன்று இருபத்தாறும்தேதி திதியும் சஷ்டி (ஆறும்நாள்) இங்கு எழுந்தருளியிருக்கும் குருமகாசந்நிதானமும் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் என்று பொருத்தத்தைக் குறிப்பிட்டார்கள். இது நாமாக அமைத்துக் கொள்வதில்லை. ஊன்றி உணர்ந்தால் நம்மில் பலரும் நன்கு

உணரலாம். ஊன்றிக் கவனியாதபோது இவை எல்லாம் நாமாகவே செய்துகொள்வதாகத்தான் தோன்றும். அது உண்மை அல்ல.

**சமய வளர்ச்சிக்கு :**

சமயவளர்ச்சிக்கு ஆதீனங்களும், ஆலயங்களும் இப்பொழுது செய்துவரும்பணிகளைவிட மேலும்பலதுறையிலும்சமயவளர்ச்சிப் பணிகளைச் செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஆதீனங்கள் ஆலயங்கள் எல்லாம் சமயத்தை ஒல்லும் வகையெல்லாம் பரவச் செய்வதற்காக எழுந்தனவே. ஆயினும், மக்களும் ஆலயங்களுடனும், ஆதீனங்களுடனும், சமயத் தொடர்பான மற்றைய மன்றங்களுடனும், சபைகளுடனும் ஒத்துப் பணிசெய்தால்தான் நாம் நினைத்த அளவிற்கு வளர்ச்சியடைய முடியும். அதிலும் முடியாட்சிக் காலமாயின் ஆதீனங்கள், ஆலயங்கள், மற்றும் சமய நிலையங்கள் மீது பொறுப்பைச் சொல்லலாம். குடியாட்சி உள்ள இக்காலத்தில் மக்கள் அனைவரும் அவரவரும் தத்தம் கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

**தெய்விகப் பேரவை :**

ஆதீனங்களிலும் மடாலயங்களிலும் உள்ளவர்கள் சமய வளர்ச்சிக்கு நல்ல அமைப்பு ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்து அதன் மூலம் சமயப்பணி செய்யக் கடமைப்பட்டவர்கள். அவ்வாறே தமிழ்நாடு தெய்விகப் பேரவை என்ற நிறுவனத்தை அமைத்து, பட்டிதொட்டிகளிலும் பட்டினங்களிலும் நல்ல பணி ஆற்றி வருகிறார்கள். அதில் உறுப்பினர்களாகச் சேர்ந்து, அதனை வளர்ப்பதன்மூலம் மக்களுள் தங்கள் சமய உணர்வை வளர்த்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சைவ மெய்யன்பர்கள் இப்பேரவையின் கிளைச் சங்கங்களைப் பயன்படுத்திக் கொண்டு சமய உணர்வை வளர்ப்பதன் மூலம் தாமும் உயர்ந்து சமுதாயத்தையும் நாட்டையும் நன்கு வளர்த்துக்கொள்ள முயலல் வேண்டும்.

**சமயம் வளர :**

கிறிஸ்தவம் போன்ற பிறசமயத் தலைவர்களும் நிறுவனத்தை அமைத்துக்கொடுத்து மக்களுடைய உழைப்பையும் உதவியையும் கொண்டே சமயங்களை வளர்க்கின்றார்கள். அதுபோல் நம் மக்களும் ஆங்காங்குள்ள சமய நிறுவனங்களோடு கடமை உணர்வுடன் ஈடுபட்டு ஒத்துப் பணிசெய்து தாமும் உயர்ந்து தம்மைச் சார்ந்தவர்களையும் உயர்த்தித் தம் சைவ சமயம் வளரப்

பணிசெய்ய முன்வருவார்களாக. இந்நல்லெண்ணத்தை மக்களிடையே எழுப்பி நற்பணிசெய்யத் திருவருள் முன்னிற்குமாக.

**வாழ்த்து :**

மதுரைமாநகரத்தில் நகரப்பெருமக்கள், ஆலய அறங்காவலர்கள் சார்பிலும், சைவசித்தாந்தசபை, பன்னிரு திருமுறை மன்றம், திருவள்ளுவர் கழகம், திருப்புகழ்ச் சபை, மதுரை நகர் சிவாசாரியர் சங்கம் முதலிய பல்வேறு சங்கங்கள் சார்பிலும் வரவேற்பு அளித்து, ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் தரிசனத்தைச் சிறப்புற நிகழ்த்துவித்தார்கள். அவர்கள் அனைவருக்கும் ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கலிங்கப்பெருமான் திருவருளால் எல்லா நலமும் பெருகுக என நல் வாழ்த்து வழங்குகின்றோம்

---

தருமையாதீனம்

## ஸ்ரீ ஞானம்பிகை உடனுறை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில்

# கோடி அருச்சனை

தருமையாதீனம் நானூறு ஆண்டு வரலாற்றுச் சிறப்புடையது. இதனைத் தோற்றுவித்தருளியவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர். இவர் சிவசமாதி கூடி, அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத் திருவுருக்கொண்டு இன்றும் அருள்பாலித்துவருவது தருமபுரத்தில் மேலக்கோயில் என வழங்கும் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில்.

உலகநலங் கருதி, தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின்வண்ணம், சுவாமிக்கும் அம்பாளுக்கும் கோடி அருச்சனை நடைபெறுகிறது. இன்றுவரை பத்தொன்பதாவது லக்ஷம் பூர்த்தியாகி இருபதாவது லக்ஷார்ச்சனை நடைபெற்று வருகிறது. சிவபக்தி குருபக்திமிக்க அன்பர்கள் பலர் பங்குகொண்டு வழிபட்டுப் பயன்பெற்று வருகின்றனர். அன்பர்கள் பலரும் பங்குகொண்டு உய்தி பெறுவதற்கு வாய்ப்பாகக் கீழ்க்காணுமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**சுவாமி அம்பாள் சகஸ்ரநாமார்ச்சனை இரண்டிற்கும் ரூ. 10—00.**

கட்டணம் பணவிடை செய்தால் அருச்சனை செய்து பிரசாதங்கள் அனுப்பிவைக்கப்பெறும். கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி:- மானேஜர், தருமையாதீனம், தருமபுரம், மாயூரம் 609001.

---

# மருகலான் அடி

நீதிபதி, கனம். எஸ். மகராஜன் பி. ஏ., பி. எல்.,

மனித உள்ளத்திலுள்ள முண்டு முடிச்சுகளையெல்லாம் துருவித்துருவி ஆராய்ந்தார் டாக்டர் யுங் (Jung) என்ற பேரறிஞர். 1961-ல் மறைந்தவர் அவர். மறைவதற்கு முன்னால் மனிதவாழ்க்கையில் தான் கண்ட தீர்ந்த முடிபுகளைப்பற்றி அவர் சொன்னார்: "இப்பொழுது எனக்குத் தெளிவாக ஒரு உண்மை துலங்கிவிட்டது. அது என்னவென்றால், மனித சமுதாயத்துக்கு நேரிடப்போகும் அபாயம், மனிதனுக்குப் புறத்திலிருந்து வருவதல்ல, மனிதனுடைய அகத்திலிருந்து வருவதுதான். மனித மனத்திலுள்ள திருகு முறுகலும், கோணலுமே மனித வாழ்வுக்கு உலைவைக்க முயல்கின்றன: இந்தப் பூமியில் குறிப்பிட்ட சிலர் நிதானத்தை இழந்தார்களேயானால், ஒரு ஹைட்ரஜன் குண்டு வெடித்து உலகத்தையே பாழாக்கிவிடும்" என்றார். "இந்தக் கோணலையெல்லாம் நிமிர்ப்பதற்கு ஒரே ஒரு வழியிருக்கிறது. இந்தியர்களில் சிலர் பயின்றுவரும் யோகப்பயிற்சிதான் இந்தக் கோணலையெல்லாம் நிமிர்க்கும் வல்லமை படைத்தது." என்றும் டாக்டர் யுங் சொல்லியிருக்கிறார்.

யோகம் என்றால் ஒன்றித்து நிற்பது என்று பொருள். மன ஒருமையில்லாதவர்கள் செயலில் ஈடுபடாமலிருக்கும் வரையில் மற்றவர்களுக்கு நல்லது. ஆனால், அவர்கள்செயற்படத்தொடங்கி விட்டாலோ, அதனால் விளைவது கலப்பற்ற தீமைதான்; கோணலான சித்தத்திலிருந்து கோணலான செயல்தானே பிறக்கும்.

ஆகவே, செயலில் ஈடுபடுவதற்கு முன் நம் உள்ளத்தைநாம் நீட்டி நிமிர்த்து, பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும். பருப்பொருளாகிய உடலிலே அழுக்கிருந்தால், பருப்பொருளாகிய நீரால் கழுவி அதை எடுத்துவிடலாம். நுண்பொருளாகிய மனசிலிருக்கும் அழுக்கைப் பருப்பொருளால் கழுவமுடியாது. மனசை மனசால்தான் கழுவலாம். "செல்லுமளவும் செலுத்துமின் சிந்தையை" என்று சொல்லுகிறார் திருமூலர். தியானத்

திலிருந்து பழகினல், ஆணவச் சிறையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபடலாம். நம்மை மறந்து, நமக்கு அப்பாலிருக்கும் ஒரு பொருளை ஆசையோடு சிந்தித்து வணங்கினல், மன ஒருமை ஏற்படும்; எல்லோரையும் எல்லாவற்றையும் ஒன்ருகக் காணும் காட்சி நமக்குக் கிட்டும். இதைத்தான் தவம் என்று சொல்லுகிருர்கள். இந்தத்தவத்தால் நம் பேதைமை தீரும்; திருகலாகிய நம் சிந்தை திருந்தும்; வாரி வாரி ஆனந்தத்தைப் பருகலாம்.

திருமருகல் என்ற ஊரில் கோயில்கொண்டுள்ள இறைவனைத் தியானம் செய்தால் இவ்வளவும் கிடைக்கும் என்று அப்பர் அடிகள் உறுதி கூறுகிருர். அல்லாவை நினைத்தாலும், ஜெஹோவாவை நினைத்தாலும், புத்தரை, விஷ்ணுவை நினைத்தாலும் இப்பலன்களைப் பெறலாம்.

"பெருகலாம் தவம் பேதைமை தீரலாம்
திருகலாகிய சிந்தை திருந்தலாம்
பருகலாம் பரம் ஆயதோர் ஆனந்தம்
மருகலான் அடி வாழ்த்தி வணங்கவே."

என்பது அப்பர் தேவாரம். இவ்வாறு பக்குவப்பட்ட மனிதன் சமுதாயப் பணியில் ஈடுபடுவானேயானல், அச்சமும் வெறுப்பும் நீங்கும்; அகமும் புறமும் இணையும்; அன்பும் இன்பமும் பெருகும்.

---

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkali.

"We are always happy to come to the temple of Sirkali which is so well kept and where we find always something interesting to see."

(Sd.) F. L'Hernault,
French Institute of Indology,
Pondicherry.

30—5—74.

சிறுகதை :—

# கோயில் மணி

“ செந்தமிழ்ச்செல்வர் ”

வித்துவான், திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ.,

எங்கே பார்த்தாலும் நசநச என்று ஈரம். ஐப்பசி அடை மழை என்பது சரியாக இருக்கிறது. வீதியில் நடந்து செல்வதற்கே அருவருப்பாக இருக்கிறது. ஈசுவரன் கோயிலுக்குப் போகும் கூட்டம் குறைவு. ஆனால், முருக முதலியார் சரியாகச் சந்தியா காலத்துக்குப் போகாமல் இருக்க மாட்டார், சூரியன் மலைவாயில் விழும் நேரத்தில் தரிசனம் செய்தால் ஆயிரம் அசுவமேத யாகம் செய்த பலன் உண்டு என்று யாரோ அவரிடம் சொல்லியிருக்கிறார்கள். அதை அவர் விடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டுவிட்டார்.

ஊரில் இரண்டு கோயில்கள் உண்டு; ஒன்று சுப்பிரமணிய சுவாமிகோயில்; மற்றொன்று சிவன்கோயில்; சிவன்கோயில்பெரிது; சுப்பிரமணிய சுவாமி கோயில் அவ்வளவு பெரிதன்று. ஊரின் எல்லையில் இருக்கிறது முருகன் கோயில். ஊரைச்சார்ந்து இருக்கிறது சிவன்கோயில். முருகன் கோயிலுக்குப் போகிறவர்களுக்குப் பக்தி அதிகம் என்றுதான் சொல்லவேண்டும். மழையானாலும், வெயிலானாலும் அத்தனை தூரம் நடந்து செல்வதற்கு எல்லோருக்கும் சுறுசுறுப்பு வருமா ?

முருக முதலியார் இரண்டு கோயில்களுக்கும் போகிறவர். செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, சஷ்டி, கார்த்திகைகளில் முருகன் கோயிலுக்குப் போவார். மற்ற நாட்களில் சிவன் கோயிலுக்குப் போவார். எங்கே போனாலும் சாயங்கால பூசைக்குத்தான் போவார்.

கோடைக்காலத்தில் வானம் மாசுமறுவின்றி இருக்கும். சூரியன் மலைவாயில் விழும் நேரம் நன்றாகத் தெரியும். அந்தச் சமயத்துக்குச் சுவாமிக்குத் தீபாராதனை செய்ய வேண்டுமென்று முதலியார் குருக்களை வற்புறுத்துவார். அவர் சிவன்கோயிலுக்குப் பரம்பரைத் தருமகர்த்தா. கூடிய வரையில் குருக்கள் அப்படியே

செய்வார். சூரியன் தெரியாமல் மந்தாரமாக இருந்தாலும் மழை, பெய்தாலும் அஸ்தமன நேரம் குருக்களுக்குத் தெரியாது. ஏதோ ஒரு மதிப்பாக ஆறேகால் மணி, ஆறரைமணிக்குத் தீபாராதனை செய்வார்.

சுப்பிரமணியசுவாமி கோயிலில், அப்படி அன்று. அங்குள்ள முத்துசாமி குருக்கள் சாயங்கால தீபாராதனை செய்தாரானால் நிச்சயமாகச் சூரியன் அந்தக்கணத்தில் மலைவாயில் விழத்தான் வேண்டும். ஒரு நிமிஷம் இந்தண்டை அந்தண்டை இருக்காது. முன்பே அபிஷேகம் செய்து அலங்காரம் பண்ணி நைவேத்தியமும் பண்ணி விடுவார். மணியடித்தது போல் டாண் என்று சூரியாஸ்தமன வேளையில் கர்ப்பூர ஆரத்தி காட்டுவார். சூரியன் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் அவர் தீபாராதனை செய்யும் நேரத்தில் அவன் மறைவான் என்பதில் அணுவளவும் ஐயம் இல்லை.

இது எப்படி அவரால் முடிந்தது என்று வியப்படையலாம். இது ஒன்றும் பிரமாதமான காரியம் அன்று. முத்துசாமி குருக்களுக்குச் சோதிடம் வரும். ஜாதகம் எழுதித்தருவார். கணிதமும் தெரியும். இன்ன அட்சாம்சத்தில் உள்ள ஊரில் இன்ன நாளில் அகஸ்-அதாவது பகல்நேரம்-இவ்வளவு, இது உதய காலம், இது அஸ்தமன காலம் என்ற கணக்கெல்லாம் அவருக்குத் தெரியும். முன்கூட்டியே அவர் இதை ஒரு வாரத்துக்குத் தெரிந்து எழுதி வைத்துக்கொள்வார். கோயிலில் கடிகாரம் இருக்கிறது. அஸ்தமனத்துக்குரிய நேரத்தில் கணக்காகக் கர்ப்பூர தீபம் காட்டும்படி பூசையை ஒழுங்குபண்ணிக் கொள்வார்.

சிவன் கோயில் சாமிநாத குருக்களுக்கு இது தெரியாது. முத்துசாமி குருக்களிடம் இந்தக் கணக்கைத் தெரிந்துகொள்ளலாம் என்ற எண்ணமும் தோன்றவில்லை.

முருக முதலியார் அடிக்கடி அவரிடம் குறை கூறுவார்; "அந்தக் கோயிலில் டாண் என்று அஸ்தமன சமயத்துக்குச் சாயங்கால பூசை நடக்கிறது. நீர் நிதானமாக இருட்டின பிறகு செய்கிறீர்! 'சிவன்கோயிலில் பிரதோஷகாலம் மிகவும் முக்கியம்' என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அந்தப் பூசைக்கு எவ்வளவு மகத்துவம்! நீர் இதையெல்லாம் கவனிக்கிறதே இல்லை" என்று கடிந்துகொள்வார்.

அந்தக்குருக்கள் என்ன செய்வார்! சூரியன் தெரியாத காலங்களில் ஆறேகாலுக்குப் பூசை செய்வார். முருக முதலியாருக்கு அகஸ்கணக்கு என்று ஒன்று இருப்பதே தெரியாது. வானம் மூடியிருக்கும்போது எப்படித் தெரிந்துகொள்ள முடியும் என்றும் யோசிக்கவில்லை. அவருக்கு ஒரே குருட்டு எண்ணம். "அந்தக் குருக்கள் செய்யும்போது இவர் ஏன் செய்யக்கூடாது" என்பதுதான். அதை வாய்விட்டுப் பலமுறை சொல்லிவிட்டார்.

அன்று சோமவாரம். விடாமல் மழை பெய்துகொண்டே இருந்தது. வெறும் சோமவாரம் அன்று; கார்த்திகைச் சோம வாரம். கார்த்திகை முதல் தேதியே சோம வாரமாக வந்துவிட்டது. ஐப்பசி மழை இன்னும் தொடர்ந்து பெய்துகொண்டிருந்தது. முருக முதலியார் கோயிலுக்கு போனர். அப்போதுதான் சாமிநாத குருக்கள் அபிஷேகம் தொடங்கியிருந்தார். "ஏன் ஐயா இதற்குள் அபிஷேகம் முடிந்திருக்கும் என்றல்லவா நினைத்தேன்? மணி ஆறரை ஆகிறதே!" என்ருர்.

"நான் என்ன செய்வேன்! ஆறேகாலுக்கே தீபாராதனை ஆகிவிடும். ஆனால் இந்தக் கடிகாரம் ஓடவில்லையே! என்று கோயிலில் இருந்த ஜாம்பவான் கடிகாரத்தை காட்டினர். முதலியாருக்குக் கோபம் வந்துவிட்டது. அசுவமேத யாகபலன் கிடைக்காமல் போய்விட்டதல்லவா? ஏதோ கடபுடா என்று பேசிவிட்டுப் போய்விட்டார். அந்தக் கோபத்தில் நேரே சுப்பிரமணியசுவாமி கோயிலுக்குப் போனர். அங்கே பூசையெல்லாம் உரிய காலத்தில் ஆகியிருந்தது.

சாமிநாத குருக்களுக்கு அன்று மனசு சரியாகவே இல்லை. தர்மகர்த்தா கோபித்துக்கொண்டு போனது அவர் மனதை உறுத்திக்கொண்டே இருந்தது. 'எல்லாம் ஈசுவரன் செயல்' என்று எண்ணிக்கொண்டு அன்று இரவு முழுவதும் அவர் தூங்கவில்லை.


(தொடரும்)

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

ஸ்ரீ சரபமூர்த்திக்கு

# சரப வேள்வியும் கோடியர்ச்சனையும்



திருச்சிற்றம்பலம்

பூவ னூர்ப்புனி தன்திரு நாமந்தான்
நாவில் நூறுநூ றாயிரம் நண்ணினார்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்க ளாவரே. — அப்பர்.

திருச்சிற்றம்பலம்.

ஆணவத்தால் தானே பரம்பொருள் என்று செருக்குற்ற இரணியனைத் திருமால் - நரசிங்க வடிவங்கொண்டு அழித்து அவனது குருதியைக் குடித்த காரணத்தால் மதங்கொண்டு உலகிற்குத் துன்பம் விளைத்தபொழுது, அந்நரசிங்கத்தை அடக்குவதற்கு, சிவபெருமான் எடுத்த வடிவமே ஸ்ரீ சரபர் திருவுருவம். இவர் திருபுவனம் திருக்கோயிலில் எழுந்தருளி அருள் வழங்குகின்றார். இவரை ஞாயிற்றுக்கிழமைகளில் வழிபடுவது சிறந்தது. அதிலும் சிறப்பாக அன்று இராகுகாலவேளையில் வழிபட்டு அன்பர்கள் பலர் பயன்பெற்று வருகின்றனர்.

ஸ்ரீ சரபமூர்த்தியை நினைப்பவர்களும் வழிபடுபவர்களும் பகைநீக்கம், பாபக்கழிவு, கள்வர், பகைவர், அரசர்களால்

ஏற்படும் துன்பம், அகாலமரணம், வலிப்புநோய், சுரநோய், எதிர்பாராத விபத்து இவை நீங்கப்பெறுவர். இம்மை மறுமை இன்பங்களையும் வெற்றியையும் எய்தி இன்புறுவர் என்று சரப கல்பம் கூறுகிறது.

> "யஸ்ய ஸ்மரண மாத்ரேண வைரிணும் குலநாசனம்
> போக மோக்ஷ பலம் சிரேஷ்டம் புக்தி முக்தி பலப்ரதம்
> சர்வ பாப ப்ரசமனம் சர்வா பஸ்மார நாசனம்
> ராஜ சோராரி மிருத்யூநாம் தாசனம் ஜயவர்த்தனம்
> ஜ்வர ரோகக்னம் ஆபத்க்னம்" —சரபகல்ப்பம்.

உலகில் பகையும் பிணியும் நீங்கி வசியும் வளனும் சுரக்கவும் போர்க்குமுறல் அடங்கி அமைதி நிலவவும் இப் பெருமானுக்கு சகஸ்ரநாமார்ச்சனை ருபமாக 2—9—73ல் லக்ஷார்ச்சனை தொடங்கப் பெற்றது. அன்பர்களின் ஆர்வத்தாலும் பக்தியாலும் பலரும் பங்குபற்றி வழிபட்டு வருவதாலும் இதைக் கோடியர்ச்சனையாக நிகழ்த்த, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளம் கொண்டுள்ளார்கள் என்பது அறியத்தக்கது. இப்பொழுது இவ்வர்ச்சனையில் ஐந்தாவது லட்சார்ச்சனை நிறைவுபெற்று, ஆறுவது லட்சார்ச்சனை நடைபெறுதல் அனைவரும் அறிந்தது.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஞாயிறுதோறும் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்கு அருட் பிரசாதம் வழங்கியருள்கின்றார்கள்.

தொடர்ந்து நடைபெறும் லட்சார்ச்சனை, சரப வேள்வி ஜபம் முதலியவற்றில் பங்குகொள்ள விரும்பும் அன்பர்கள் ஒருவார காலத்திற்கு முன்னதாகத்தெரிவித்து கலந்துகொண்டு வழிபட்டு உய்வார்களாக.

| | | | |
|---|---|---|---|
| ஏகதினலக்ஷார்ச்சனை 1-க்கு கட்டணம் | .... | ரு. | 500—00 |
| ஸ்ரீ சரபவேள்வி ஜபம் முதலியவற்றிற்குக்கட்டணம் | | ரு. | 250—00 |
| பஞ்சமுகார்ச்சனை 1-க்கு கட்டணம் | .... | ரு. | 50—00 |
| சகஸ்ரநாமார்ச்சனை 1-க்கு கட்டணம் | .... | ரு. | 10—00 |

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி :—

பொருளாளர்,
ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம்,
திருபுவனம் P. O. தஞ்சை மாவட்டம்.

திருவாரூரில் :

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா ( 18—4—74 )



ஸ்ரீ அப்பர் சுவாமிகளை
தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபடுதல்.

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா (18—4—74)



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
திருபுவனம் தேவஸ்தானம் ஓதுவாமூர்த்தி, திரு. தி. சாமிஐயா தேசிகருக்கு
"திருமுறைக்கலாநிதி" என்னும் பட்டம் வழங்கி
ஆசியருளல்.

# சிவஞானசித்தியார் தெளிபொருள் விளக்கம்

தருமையாதீனப் புலவர் சித்தாந்தக் கலைமணி

திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

( மலர் 33. இதழ் 6. பக்கம் 295 இன் தொடர்ச்சி )

இனி, அவர் பிற மதத்தவரை இகழுமாறும், அவர்க்கு இரங்குமாறும் கூறுகின்றார்.

25. போகத்தை மண்ணிற்கண்டு விட்டுபோய் விண்ணிற் [கொள்ள
மோகத்த ராகி அல்லல் முயன்றுழல் மூடர் எல்லாம்
தாகத்தில் தண்ணீர் கண்டு விட்டுப்போய்த் தண்ணீர் [கேட்டுச்
சோகித்தே உண்ண எண்ணித் துயருறு வார்கள் ; [அந்தோ !

### இதன் தெளிபொருள்

இன்பம் ஐம்புலன்களின் வழியாக இவ்வுலகில் இப்பொழுதே நிரப்பக் கிடைத்தலைக் கண்கூடாக அறிந்தும் அதனை நுகராமல் வெறுத்து ஒதுக்கிவிட்டு மேலுலகத்தில் பேரின்பம் உளது என்று சிலர் சொல்வதைக் கேட்டு அதை நுகர்வதற்கு விருப்பம் உடையவராய்ப் பட்டினி முதலியவற்றால் அல்லற்பட்டு வருந்தித் திரிகின்றவர் எல்லாம், தாகம் உள்ள பொழுது தண்ணீர் எதிரில் கிடைத்தும் அதனைப் பருகாமல் விடுத்து, தொலைவில் நல்ல தண்ணீர் இருப்பதாகச் சிலர் சொல்வதைக் கேட்டு அதனைப் பருக எண்ணி நெடுந்தொலையான பயணத்தைச் செய்து துன்புறுகின்றவர்களே யல்லது வேறு யாவர் ! அதனால் அவரை நாம் 'மூடர்' என்று சொல்வதல்லது வேறு எவ்வாறு சொல்வது ? அந்தோ ! அவரது நிலை பெரிதும் இரங்குதற்குரியது.

### விளக்கம்

" துயருறுவார்கள் " என்றது, 'துயருறுகின்றவரோடு ஒத்தவர்கள்' என்றதாம். (14)

இனி, அவர் தம்மோடு கொள்கையாலும், செயலாலும் நெருங்கியுள்ளவர்களோடு அளவளாவுமாறு கூறுகின்றார்.

26. வாழவே வல்லை; வாமி! வலக்கைதா என்னுயிர்க்குத்
தோழன்நீ; உன்னை ஒப்பார் சொல்லிடின் இல்லை
[கண்டாய்!
கோழைமா னுடர்தீ தென்னும் கொலைகளவாதி
[கொண்டு
சூழும்வார் குழலார் மொய்ப்பச் சுடரெனத் தோன்றி
[னையே.

## இதன் தெளிபொருள்

ஏ, வாமியே! நீயே இவ்வுலகில் வாழத் தெரிந்தவன். எங்கே, உன் வலக்கையைக் கொடு. உனக்கு நிகரான மதத்தினர் ஒருவரைச் சொல்ல எண்ணிறல், உனக்கு நீயே ஒப்பு அல்லது பிறர் இல்லை. ஆண்மையின்மையால் பேடிகளாய சிலர் 'பாவம்' என்று விலக்கிய கொலை, களவு முதலியவற்றை அஞ்சாது செய்து, பெண்டிர் ஒருவரல்லர்; இருவரல்லர்; எண்ணிறந்தோர் உன்னைச் சுற்றிலும் மொய்த்து நிற்க, அவர்கள் நடுவே அவர்கட்கு விளக்குப்போல நீ வருகின்றாய்; ஆகையால், எனக்கு நீ உயிர்த்தோழன் ஆவாய்.

## விளக்கம்

வாம மதமாவது தாழ்ந்த முறையில் வழிபாடு செய்யும் மதமாம். இம்மதத்தவர், 'தெய்வம் பெண் வடிவினது; தெய்வம் தானும் சத்தி மிகவுடையதாய், தன்னை வழிபடுவோர்க்கும் சத்தியை மிகத்தரும். பலவகை மதுக்கள், நரமாமிசம் முதலிய பலவகை மாமிசங்கள் முதலியவற்றைத் தெய்வம் மிக விரும்புகின்றது; அதனால் கட்குடப் படையல், நரபலி முதலிய உயிர்ப் பலி இவற்றைச்செய்து தெய்வத்தை வழிபடல் வேண்டும். அவ்வாறு வழிபடுவோரும், பலியிடப்படும் உயிரும் தெய்வத்தின் அருளைப் பெறுவர்; பெண்டிர் யாவரும் தெய்வ வடிவினரே. அவர்களை வணங்குதலும், அவர் விரும்பிய பொருளையும் இன்பத்தையும் விரும்பியவாறே அடைய உண்டாட்டுச் செய்து களித்தலும் ஆடவர் கடன்' என இன்னோரன்னவற்றைக் கூறுவர்.

'சிவம், சத்தி இரண்டில், சத்தியே பெரிது' என்போற்றும் சாத்தமதம் இதனிற் சற்றே வேறுபாடு உடையது. அன்றி, அதுவும் வாம மார்க்கத்ததே. இது மகளிர்க்குக் கற்பு வேண்டும் எனக்கொண்டு கற்புடைய மகளிரையே தெய்வ வடிவினராகக் கூறும். வாம மார்க்கம் 'தெய்வம் உண்டு' எனக்கொள்ளினும்,

அதனைத் தாழ்ந்தன பலவற்றின் இடையே வைத்துக்கொள்ளுதலால் அதனை 'வைதிகம்' என்று கொள்வது இல்லை. வாம மார்க்கத்தின் சிறப்பு நூல்கள் 'தந்திரம்' என்னும் சிறப்புப் பெயர் உடைமையால், அம்மதங்கள் 'தாந்திரிகங்கள்' எனப்படும். எனினும், வேத ஆகமங்களை இகழ்ந்து தள்ளாமல் ஏற்றுக்கொள்ளுதலால், இவை 'அகப்புறச் சமயங்கள்' எனப்படுகின்றன. 'தெய்வம்' என்ற ஒன்றைத் தவிர ஏனைய வெல்லாவற்றாலும் வாமம் உலகாயதத்தொடு ஒத்து நிற்றலால், வாமிகளை உலகாயதர் இங்குக் கூறியவாறு புகழ்ந்து அளவளாவுகின்றனர் என்க.

> " சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்;
> சத்தி அழிந்தது தம்மை மறத்தலால் "

எனத் திருமூலர் அருளுதல் வாம மதத்தவரை நோக்கியேயாம்.

(13)

இனி, அவர் தமது முத்தியாகிய அரிவையர் இன்பத்தின் சிறப்பினை உணர்த்துமாறு நான்கு செய்யுளாற் கூறுகின்றார்.

27. ஈசனார் அயனார் மாலோ டிந்திரன் தெரிவை மார்பால்
பேசொணா வகைகளெல்லாம் செய்தன்றோ பெரிய
ரானார்!
ஆசையால் அவர்போல் நாமும் ஆகவேவேண்டுமாயின்,
வாசமார் குழலா ரோடும் வல்லவா கூடி வாழ்மின்.

## இதன் தெளிபொருள்

'சிவலோகம், பிரம்ம லோகம், வைகுந்தம், இந்திர லோகம் என்பன முதலாகத் தேவ லோகம் பல உள' என்றும், 'அவற்றிற்கு முதல்வராகச் சிவன் பிரமன் மாயோன், இந்திரன் முதலியோர் உளர்; அவர்களெல்லாம் மிக மேலான இன்பத்தில் வாழ்கின்றனர்; தவம் செய்தால் நாமும் அவர்களைப் போல ஆகலாம்' என்றும் புராணங்களிற் சொல்லி வைத்தவர்களுக்கு, 'சிவன் தன் மனைவியை வேறாய் இருக்க ஒட்டாது தன் உடம்பிலே பாதியாக இருக்க வைத்தும், அவள் அறியாதவாறு 'கங்கை' என்னும் மற்றொருத்தியைத் தலையிலே மறைத்து வைத்தும் உள்ளான்' என்றும், 'பிரமன், மாயோன் என்பவரும் அவ்வாறே தம் துணைவியரை நாவிலும் மார்பிலும் இருக்க வைத்துள்ளனர்' என்றும், இந்திரன் தன் துணைவி இந்திராணியோடு கற்பகச் சோலையில் பலகாலம் இருந்து தான் விரும்பிற

வாரெல்லாம் இன்பம் நுகர்தலேயன்றி, ஊர்வசி, மேனகை, திலோத்தமை முதலிய ஆடல் மகளிர் பலரோடும் கூடி இன்பத்தில் மூழ்குகின்றான்' என்றும் கூறியிருத்தலால், 'மகளிரோடு பிறர் அறியச் சொல்ல ஒண்ணாத வகையிலெல்லாம் கூடி ஆடி இன்புறும் பேறு வாய்க்கப் பெறுதலே பெரும்பேறு என்பதும், 'அப்பேற்றினைப் பெற்றோரே பெருவாழ்வு பெற்ற மேலோர்' என்பதுமே அவர்கட்கும் கருத்தாயிற்று. ஆகவே, 'அவர்கள் போல நாமும் ஆக வேண்டும்' என்பது உங்கள் கருத்தாய் இருக்குமாயின், நீவிரும் சிவன் முதலியோர் போல உங்கட்கு இயலும் வகையில் எல்லாம் மகளிரோடு கூடி இன்புற்று வாழுங்கள்.

### விளக்கம்

முன் இரண்டடிகள் பிறர் மதம் கூறியதன்றித் தம்மதம் கூறின அல்ல. "பேசொணா வகைகள்" என்றது சிவன் முதலியோர் செயலாக மேல் விரிக்கப்பட்டவற்றை. "நாமும்" என்றது, முன்னின்றார் கருதுமாற்றை அங்ஙனமே கொண்டு கூறியது ஆதலின் அதற்கு, மேல் உரைத்ததே பொருள் ஆதல் அறிக. மேல் வேதத்தைத் தம் கருத்திற்குத் தகக் காட்டினாற்போல, இங்குப் புராணங்களையும் அங்ஙனம் காட்டினர் என்க. (16)

28 தையலார் ஊடல் கூடத் தாம்அவ ரோடும் கூடிச்
செய்யதா மரையை வென்ற சீறடி செம்பஞ் சூட்டி
மெய்யெலாம் பாசஞ் சூடும் வேடத்தார் மெய்யிற் கூடா
மையல்யா னுடர்பொய் மார்க்க வேடத்தே மாய்கின்
[றாரே.

### இதன் தெளிபொருள்

மகளிர் ஊடல் கொண்ட காலத்து அது பற்றி அவரை வெறாது, ஊடலின் பெருமை அறிந்து அவரோடு நெருங்கியிருந்து, செம்மையாலும் மென்மையாலும் இயல்பாகவே செந்தாமரை மலரை வென்று விளங்கும் அவர்களது சிற்றடிகட்கு அவை மேலும் அழகு பெற்று விளங்குமாறு அவைகட்குச் செம்பஞ்சுக் குழம்பைத் தம் கையாற் பூசி, அதனாலும் ஊடல் தணியாது அச் செம்பஞ்சுக் குழம்போடே அவர்கள் பாதங்களைச் சூட்ட, அந்த அடையாளங்களைத் தங்கள் உடம்பெங்கும் அமையக் கொள்கின்ற இன்ப வேடத்தாற் பொலிகின்ற உலகாயதப் பெருமக்களது உண்மை நெறியிற் செல்லமாட்டாத அறிவிலிகள், 'இந்திர லோகம் சந்திர லோகம்' என்றெல்லாம்

இல்லாதவற்றைப் பற்றிப் பெருமைப்படப் பேசும் பொய்யர்களது வழியிற் சொல்லப்படுகின்ற தலைமயிரை மழித்தல் அல்லது நீட்டலைச் செய்தும், மரவுரி அல்லது தோல் ஆடை அல்லது கல்லாடையை உடுத்தும், நீற்றைப் பூசியும், மற்றும் இன்னோரன்னவான வேடங்களைப் புனைந்து, தாம் நுகரக் கிடந்த இன்பத்தை நுகராமலே போக்கி, வாளா இறந்தொழிகின்றார்கள்; இஃது இரங்கத் தக்கது!

### விளக்கம்

ஆடுதல் - மேற்கொண்டிருத்தல். கூடுதல், இங்கு, அனுபவித்திருத்தல். (17)

29. வாசம்ஆர் குழலார் தங்கள் மணி அல்குல் தடத்தேமூழ்கி
நேசமார் குமுதச் செவ்வாய் அமுதினை நிறைய உண்டு
தேசுலாம் அணிமென் தோள்மேல் சேர்ந்துவீற் றிருந்தி [டாதே
மாசுலாம் மனத்தார் எல்லாம் மறுமைகொண் டழிவார் [மன்னோ!

### இதன் தெளிபொருள்

மணம் மிக்க கூந்தலையுடைய மகளிரது அழகிய அல்குலாகிய தடாகத்திலே மூழ்கி, விருப்பம் மிக்க அவரது செவ்வாம்பல் போலச் சிவந்த வாயின்கண் உள்ள ஊறலாகிய அமுதத்தை நிரம்ப உண்டு, அவரது அழகிய அணிகலங்களை யணிந்த தோள்மேல் பொருந்தி இம்மையிலே கிடைக்கின்ற இவ்வின்பத்தை நுகர்ந்து இருத்தலை விடுத்து, அறியாமை நிறைந்த மனத்தை உடைய மனிதர் எல்லாம் மறுமையில் இன்பம் இருப்பதாகக் கருதிக்கொண்டு வீணே இறந்துபோகின்றார்கள்; அந்தோ!

### விளக்கம்

'மறுமையை நம்புகின்ற காரணத்தால் மணி அல்குல் தடத்தே மூழ்குதலை விடுத்து, கங்கை முதலிய நதிகட்குச் சென்று அவற்றின் வெள்ளத்தில் மூழ்குகின்றார்கள்; செவ்வாய் அமுதத்தை வேண்டி உண்ணுமல் விடுத்து, தேவாமிர்தம் உண்ணப் பட்டினி கிடக்கின்றார்கள்; தோள்மேற் சேர்ந்து வீற்றிருத்தலை விடுத்துப் புட்பகம் முதலிய விமானங்களில் உலாவ விரும்பி எங்கும் கால் கடுக்க நடக்கின்றார்கள்' என்பன இதன்கண் குறிப்பில் தோன்றுதல் காண்க. (18)

(தொடரும்)

# “அணுத்தருந் தன்மை இலையோன் காண்க”*

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

புலவர், திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.

**முன்னுரை :**

இது திருவாசகத்தில் உள்ள ‘திருவண்டப்பகுதி’ என்னும் திருவகவலின்கண் ஒரு வரி (45) ஆகும். திருவாசகத்தினையே தம் உயிர் நூல் எனக்கொண்டுபோற்றியவர் இராமலிங்க அடிகள். அதன்கண் மிகவும் தனிப்பெருஞ் சிறப்பு உடையதாகத் ‘திருவண்டப்பகுதி’ என்னும் திருவகவலினையே அவர் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தார்.

“உருவண்டப் பெருமறைஎன் றுலகமெல்லாம் புகழ்கின்ற
திருவண்டப் பகுதிஎனும் திருவகவல் வாய்மலர்ந்த
குருவென்றப் பெருந்தவரும் கூறுகின்ற கோவேநீ
இருவென்றத் தனியகவல் எண்ணமெனக் கியம்புதியே”

எனவரும் இராமலிங்க அடிகளாரின் திருவருட்பாச் செய்யுளால் இவ்வுண்மை இனிது தெளியப்படும்.

**இறைவனின் நுண்மை :**

இத்தகைய சிறப்பின் மிக்க ‘திருவண்டப் பகுதி’ அகவலின் கண் வரும் மேற்குறித்த வரியானது, மிகவும் பொருட்சிறப்பு உடையதொன்றாகும். இறைவனின் நுண்மைத் தன்மையினை விளக்குவது இவ்வரியின் கருத்து. இறைவன் நுண்மையில் நுண்மையாகவும் பருமையிற் பருமையாகவும் இலங்குகின்றான். “நுண்ணியான் பரியான் நோவுளார் வாயுளான்” என இறைவனின் இயல்புகளைத் திருஞானசம்பந்தர் தமது தேவாரப்பாடல் ஒன்றில் விளக்குதல் காணலாம்.

---

*சென்னை தியாகராயநகர்த் தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் நடைபெற்றுவரும் திருவாசகவகுப்பு ஒன்றில் நிகழ்த்திய கருத்து விளக்கங்களைத் தழுவி எழுதியது.

### அணுவின் நுண்மை :

நுண்ணிய பொருள்களில் எல்லாம் நுண்மை வாய்ந்தது அணு. அணுவின் நுண்மையினை இத்தகையதென வரையறுத்துக்கூறுதல், நம்மால் இயல்வதொன்றன்று. "ஒரு குண்டூசியின் முனையில் எத்துணையோ கோடி அணுக்கள் அமைந்து கிடக்கின்றன. ஒரு நொடிக்கு நூறு கோடி விழுக்காடு அகற்றினாலும் ஒரு குண்டூசியின் முனையில் அமைந்து கிடக்கும் பரமாணுக்களை அகற்ற இரண்டரை லட்சம் ஆண்டுகள் செல்லும் என அறிஞர் ஒருவர் குறிப்பிடுகின்றார் † இவ்வாற்றால் அணுவின் நுண்ணிய தன்மை எத்தகைய நிலையினதாக இருத்தல் வேண்டும் என நாம் ஓரளவு எண்ணியுணரலாம்.

இத்துணை நுண்ணிய பரமாணுவைக் காட்டிலும், மிகமிக நுண்ணிய பொருளாக இறைவன் திகழுகின்றான் என மாணிக்கவாசகர் கூறுகின்றார். 'அணுவிற் காணப்படும் நுட்பத்தன்மையிலும் வியக்கத்தக்க நுட்பமானவன்' என்பதே மேற்குறித்த வரியின் பொருள் ஆகும்.

### பிறழ் பிரிப்பு :

பெரும்பாலான திருவாசகப் பதிப்புக்களில் இவ்வரியானது மேற்குறித்துள்ளபடியே பதிப்பிக்கப்பெற்றுள்ளது. அங்ஙனமே கொள்வதாயின், இவ்வரியின் அமைப்பில் செய்யுட்குரிய மோனை அழகு, செவ்விதின் அமையாமற் சிதைந்து குறைந்துபோகின்றது. அதனோடு, குறிக்கப்பெறும் பொருளும் தெளிவாக இல்லை.

---

† 'As regards the size of Atoms it has been said that, if we were to remove those contained in the head of an ordinary pin at the rate of a thousand million (1000 000 000) per second we should have to carry on the process for 250 000 years. And yet each of these atoms, they tell us, is itself a solar system, with electrons whilling like planets around a central nucleus.

The size of these electrons, as compared with the size of the atom they say, is like a pea in one of the great cathedrals of Europe."

— Louis Leguen, S. J.

முன்னோர்கள் பிரித்த முறையினின்றும் வழுவி வேறுவகையாகத் தொடர்களைப் பிரிப்பதனால், சில சமயங்களில் தவறான புதிய சொற்கள் தோன்றிவிடுவதும் உண்டு. அத் தவறான சொற்களே பின்னர் நாளடைவில் வழக்கில்வந்து நிலைபெற்றுவிடுதலும் இயல்பு. இவ்வியல்பு எல்லா மொழிகளிலும் பொதுவாகக் காணப்படும் ஒரு பண்பு ஆகும். a+napron என்பது an+apron என்றும் a+numpire என்பது an+umpire என்றும், a+nadder என்பது an+adder என்றும் தவறுகப் பிரிக்கப்பட்டு, அங்ஙனமே ஆங்கிலமொழி வழக்கில் நிலைபெற்று விட்டுள்ளன. இங்ஙனம் தவறுகப் பிரிப்பதனைப் 'பிறழ் பிரிப்பு' (Metanalysis) என அறிஞர் வழங்குவர்.*

தமிழில் எடுத்துக்காட்டு :

தமிழில் 'வாணுள்' என்பதனை 'வாழ்+நாள்' எனப் பிரிப்பதுபோல 'வீணுள்' என்பதனை 'வீழ்+நாள்' எனப் பிரிக்காமல் 'வீண்+நாள்' எனத் தவறுகப் பிரித்ததன் விளைவாகவே 'வீண்' என்ற ஒரு புதியசொல் தவறுகத் தோன்றி வழக்கிற் புகலாயிற்று. மிகப்பழைய தமிழ் நூல்களில் 'வீண்' என்ற சொல்லாட்சியைக் காண்டல் அரிது. அச் சொல்லின் பொருளில் 'வறிதே' 'கொன்னே' 'பயனின்றி' என்னும் சொற்களே வழங்கப்பெற்று வந்தன.

'வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்'

எனவரும் திருக்குறள் தானும் ஈண்டு அறிந்து இன்புறற்பாலது. எனவே வீணுள் என்பதனை வீண் நாள் என்று தவறுகப் பிரித்தமை 'பிறழ் பிரிப்பு' (Metanalysis) முறைக்கு உதாரணம்.

---

* 'I have newtured to coin the term 'metanalysis' by which mean that words or word groups are by a new generation analysed differently from the analysis of a former age"

— Otto Jespersen, Language.

'ஐயோன் என்பதன் பொருள் :

இத்தகையதொரு பிறழ்பிரிப்பு முறையிலேயே மேலைத் திருவாசகவரி அமைந்துள்ளது. அதனை, 'அனுத்தருந்தன்மையில் ஐயோன் காண்க' எனவே கொள்ளுதல் வேண்டும். "தன்மையில் + ஐயோன்" என்று பிரிக்கப்படுதற் குரிய தொடர் "தன்மை + இலையோன்" என்று பிறழ் பிரிப்பாகப் பிரித்துச் சில பதிப்புகளிற் பதிக்கப் பெற்றுள்ளது. 'ஐ வியப்பு ஆகும்' என்ற தொல்காப்பிய நூற்பாவின்படி, 'ஐயோன்' எனின், வியக்கத்த நுட்பம் மிக்கவன் எனப்பொருள்.

சிறந்த திருவாசகச் செய்யுள் :

இறைவன் வியக்கத்தக்க நுட்பப் பொருளாகத் திகழ்பவன் என்பதனை,

" இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன் :
நீயலாற் பிறிதுமற் றின்மை;
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே !
ஒன்றும்நீ அல்லை அன்றிஒன் றில்லை !
யார்உனை அறியகிற் பாரே ?"

எனவரும் சிறந்த திருவாசகப் பாடலில் மாணிக்கவாசகர் அழகுற விளக்குகின்றார்.

முடிவுரை :

இவ்வருமைத் திருப்பாடலின்கண், 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம் திருப்பெருந்துறையுறை சிவன்' என இறைவனின் நுண்மைத் தன்மையினை, மணிவாசகர் விதந்து அருளிச் செய்திருத்தல் அறிதற்குரியது. இவ்வாற்றால் மேற்குறித்த திருவாசகவரியின் உண்மையுருவமும் பொருளும் இனையதென்று யாவரும் இனிதுணரலாம்.

# சிவஞானப் பாலமுது*

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், செஞ்சொற்கொண்டல்,

**டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி. எச். டி.**

புறச்சமயம் பரவுதலால் இதயம் நொந்து,
    புண்ணியமாம் சைவநெறி தழைத்திட் டோங்க,
அறச்செல்வி பகவதியும் சீர்த்தி மிக்க
    அந்தணனார் சிவபாதர் தாமும் இங்கே
உறச்செய்த பெருந்தவத்தால், ஞானம் என்ற
    ஒளிப்பிழம்பு கருவாகி உருவம் ஆகிப்
பெறச்செய்த திருவருளே எங்கள் ஆசான்
    பிரான்ஞான சம்பந்தன் என்றல் பொய்யோ? (1)

சிவனுக்குத் தலைமகனாய். ஞாலம் என்ற
    சேயிழைக்குத் தவமகனாய் தமிழ் வழங்கும்
அவனிக்குத் தனிமகனாய், கவிதை என்னும்
    அருமைக்குச் சீர்மகனாய்ப் பிறந்து வந்த
'இவன் முருகன்' என்றுரைப்பார் உளரா னாலும்
    இலையென்பேன்; சினவாதீர்! வையகத்தே
சிவநிறைய வந்துதித்த 'ஞானம்' என்பேன்!
    'சிவஞான சம்பந்தன்' எனுஞ்சொல் தேரீர்! (2)

எத்திசையும் தென்திசையே வெற்றி கொள்ள,
    இம்மண்ணே மற்றுலகை வென்று மேவ,
முத்திசையும் தமிழ்வழக்கே உலகத் துள்ளே
    முழங்குகின்ற அயல்மொழியின் வழக்கை வெல்ல,
பித்திசையும் புறச்சமய மயக்கம் நீங்கப்
    பெருநெறியாம் சைவநெறி உலகில் ஓங்க
இத்திசையிற் சீகாழி மண்ணில் வந்தே
    எழுந்ததிந்த ஞாயிறெனில் மெய்ம்மை யன்றோ? (3)

---

* சீகாழித் திருமுலைப்பால் திருவிழாவில் கவியரங்கேறிய பாக்கள்.

'காழியர்க்குப் பெருந்தவமாய் அறம் வளர்க்கும்
'கவுணியர்க்குப் பெருந்தனமாய் கலைஞானத்தின்
ஆழியதோர் பெருங்கடலாய், மறைவளர்க்கும்
அருந்திரு வாய் ஞானநெறி வளர்க்கப் பெய்யும்
ஏழிசையின் தனிமுகிலாய் என்று பாடி
இதயத்திற் கனிகின்ற சேக்கிழாரின்
யாழிசையாங் கவிநயத்தை எடுத்துரைக்க
யான்புகுந்தாற் காலமிடம் போதா வன்றோ? (4)

அற்புதங்கள் பலவிளைந்த அருமை காட்ட
அமைத்திட்ட அரங்கமிது; ஆதலாலே,
முற்படவே 'மூவாண்டில் உலகம் உய்ய
நிகழ்ந்ததனை மொழிகின்றேன்' என்றுரைக்கும்
சொற்பழமைச் சேக்கிழார் கூறும் வார்த்தை
கருதயெனப் பத்தி'லயம்' தன்னைக் கூட்டி
நற்புதுமைக் கவியுரைப்பன்; நலங்கண் டீரேல்
நாயகன்தான் மணமென்றே நயந்து கொள்வீர்! (5)

நீராடப் புறப்பட்டார் தந்தை ஓர்நாள்;
நெடுங்கண்கள் நீராட மழலைச் செல்வர்
போராடச், சினத்திஞேடே மனமும் நின்று
போராடப் பின்பார்த்தார் தந்தை யார்தாம்!
பாராடக் கிண்கிணிக்கால் படியின் மீது
படிந்தாட உதைத்தழுத பான்மை பார்த்துத்
தாராடுந் தளிர்மழலை உடன்கொண் டேகித்
தாமடைந்தார் திருக்குளத்தின் பாங்கர் ஓர்பால். (6)

கரைகாணுக் கலைஞானச் செம்மலாரைக்
கரைமர்த்தி நீர்புக்கு ஆடுகின்ருர்!
இரைகாணுப் பறவையெனச் செல்வனும்
இளமையினுல் அழுகின்ருர்; உலகமெல்லாம்
உரைகாணுத் தமிழ்ப்பாட்டை உதிக்கச் செய்ய
ஓரிறைவன் அழுகையங்கே உதிப்பச் செய்தான்!
நிரைகாணுப் பழந்தந்தை நீருக் குள்ளே!
நானிலத்தின் தந்தையோ கோயிற் குள்ளே. (7)

கண்மலர்கள் நீர்ததும்ப அழகு பொங்கும்
கைம்மலர்கள் பிசைந்து, தமிழ்த்தேன் பாயும்
பண்மலராந் திருவாயில் இதழ்கள் என்னும்
பனிமலர்கள் புடைதுடிப்ப, உண்மை மேவும்

உண்மலராம் முகையவிழ அழுது நின்றார்;
　　ஒளிமலராங் கொன்றைமுடி சூடி நின்றான்
பெண்மலரை நோக்கி நின்றான்; பிள்ளையாரோ
　　பேசுகின்றார் 'அம்மே அப்பா'வென் றங்கே! (8)

தன்னையிங்கு வரவிட்ட அருளின் தந்தை
　　தாயாகும் உலகீன்ற அன்னையாரை
முன்னை நிலைச் சார்புணர்ந்தே அழைத்திட்டாரோ?
　　மூளுகின்ற இளமையினால் மொழிந்திட்டாரோ?
பின்னையிங்கே 'அம்மையே அப்பா' என்ற
　　பேச்சுக்குப் பொருளாகி இறைவன் வந்தான்
அன்னையொடும்; அழுங்குழந்தை அழகைக் கண்டே
　　அருட்சத்தி தலைநோக்கி மொழிந்தான் ஈது. (9)

'பொழிகின்ற பாலடிசில் கிண்ணம் பெய்து
　　போதமுடன் ஊட்டுகெனத் துணைவியாரும்,
வழிகின்ற சிவஞானத் தமுதங் கூட்டி
　　வாய்மொழியால் 'உண்ணடிசில்' என்றே ஊட்டி,
பொழிகின்ற கண்மலர்நீர் துடைத்துப் போக்கப்
　　புண்ணியத்தார் உலகியலை வென்று நின்றார்;
கழிகின்ற துலகியலும்; கண்ணீர் பொங்கக்
　　கருதுகின்ற சிவஞான வடிவமானார்! (10)

திருப்பெருகும் சிவஞானம், பிறவி யென்னும்
　　திருக்கொழிக்கும் உயர்ஞானம்; ஞாலமென்னும்
உருப்பெருக்கும் கலைஞானம்; வார்த்தையாலே
　　உணர்வரிய மெய்ஞ்ஞானம்; அனைத்து மங்கே
மருப்பெருக்கும் கொன்றையினார் தோணியப்பர்
　　மாணருளால் உணர்ந்தாரெம் தெய்வப் பிள்ளை!
கருப்பெருக்கங் குழிவிழுந்தே கதறுவோர்க்குக்
　　கைகொடுக்கும் பெருந்தலைவர் அழுகை தீர்த்தார்! (11)

மந்திரமே சொன்னபடி நீருக்குள்ளே
　　மறையவரும் முழுகியெழுந் திடுதற்குள்ளே
தந்திரமாய்த் தோணியப்பர் அம்மையோடும்
　　தருஞானப் பாலமுதம் ஊட்டி விட்டே
அந்தரத்தே மறைந்திடலும் அறியாதாராய்,
　　அழுதமக வருகுவந்தார்; ஞானமாகிச்
சிந்தனையிற் றேனூறிச் சிறந்திருந்த
　　சேயர்தமைக் கண்டிடுவார்; வெகுளி கொள்வார். (12)

பாலொழுகுந் திருவாயார் தம்மைக் கண்டு
பாசவினை துடைக்கின்ற நிலையில் இன்றி,
மாலொழுகும் மனத்தினராய் யாரளித்த
மாண்பில்லாப் பாலடிசில் உண்டா' யென்றே
நூலொழுகுந் திருமார்பர் வினவுகின்றார்;
நுனக்களித்தார் யாவரெனக் காட்டு கென்றே,
மேலொழுகுந் திறமறியாத் தந்தை யாரும்
மிளிர்சிறுகோல் ஓனரேச்சிச் சினந்து கேட்பார்! (13)

செந்தமிழாங் கவிதொடுத்துக் கூடல் மேவிச்
செந்தீயின் மீதுந்தண் புனலின் மீதும்
எந்தமிழை ஆருயிரை வாழ்வின் மூச்சை
இன்றேனைத் தெய்வநெறி அமுத ஊற்றை
முந்துறவே பசுமைபெறக் காத்து நின்று
முடக்குகின்ற ஆரியமாம் மொழிகள் பேசும்
அந்தகரைப் புறச்சமயத் தாரை யெல்லாம்
அச்சுறுத்தும் 'மா'ப்பிள்ளை அஞ்சுவாரோ? (14)

அச் "சிறிய பெருந்தகையார்" அழகு பொங்கி
அன்பூறுங் கண்களிலே இன்பக் கண்ணீர்
நச்சிடவே ததும்பிநிற்ப, ஐயன் கொண்ட
நாயகியார் தம்மோடும் அருகு வந்த
"உச்சியினில் எடுத்தருளும் செந்தளிர்க்கை
ஒருவிரலாற் சுட்டி "யெதிர் நின்றார் தம்மைத்
துச்சிருக்கும் அநுபூதி நிலையில் நின்றே.
'தோடுடைய செவியன்' எனப் பாட்டெடுத்தார்! (15)

"எம்மையிது செய்தபிரான் இவன்றான்" என்றே
இன்றமிழால் உலகுய்யப் பாட்டெடுத்த
செம்மையினைப் பெற்றெடுத்த தந்தை கேட்டுச்
செயமாந்த செய்தியினைச் சொல்லல் ஆமோ?
தம்மைவிடத் தம்பிள்ளை உயர்ந்து நின்ற
தன்மையினை உணர்ந்துவிட்டார் தந்தை யாரும்!
செம்மைநெறிச் சிவப்பெருக்கும் பிள்ளையாரைச்
சிவனருளென் றேதொழுது தோள்மேற் கொள்வார்!

(தொடரும்)

# வைத்தீஸ்வரன் கோவிலில் மண்டலாபிஷேகக் கார்த்திகை

திரு. என். இராமகிருஷ்ணு

இறைவன் தீராதநோய் தீர்த்தருளும் பொருட்டு மந்திரமும், தந்திரமும், மருந்துமாகி, ஸ்ரீ வைத்தியநாதன் என்னும் திருப் பெயருடன் எழுந்தருளியிருக்கும் தலம் திருப்புள்ளிருக்கு வேளூர் வைத்தீஸ்வரன் கோவில் என்றும் தற்போது அழைக்கப்படுகின்றது. தஞ்சை மாவட்டத்தில் சீகாழி தாலுக்காவில் ஒரு புகைவண்டி நிலையமாக உள்ளது. மாயூரத்திலிருந்து பஸ் வசதியும் உண்டு.

**தலம் :**

புள் (ஜடாயு), இருக்கு (இருக்கு வேதம்), வேள் (முருகன்) ஊர் (சூரியன்) என்ற நால்வரும் பூசித்தமையால் புள்ளிருக்கு வேளூர் என்று பெயர் பெற்றது. சடாயுபுரி என்றும், வேதம் பூசித்தமையால் வேதபுரி என்றும், கந்தன் பூசித்தமையால் கந்தபுரி என்றும், அங்காரகன் பூசித்தமையால் அங்காரகபுரம் என்றும், பல பெயர்கள் வழங்குகின்றன. மற்றும் பாமரமக்கள் வினைதீர்த்தான் கோயில் என்றும், தையல்நாயகி கோவில் என்றும் அழைக்கின்றனர்.

**கோயில் :**

இது, திருக்கயிலாயபரம்பரைத்தருமையாதீனத்திற்குச்சொந்தமான 27 கோயில்களில் ஒன்றாகத் திகழ்வது. கோயில் மிகவும் அழகாக அமைந்துள்ளது. சமீபத்தில் சுமார் 10 லக்ஷ ரூபாய் செலவில் திருப்பணிகள் செய்யப் பெற்று 1969 இல் கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பெற்றது. தருமை ஆதீனக் கோவில்களில் மிகவும் சிறப்பாக உள்ளது.

வைத்தியநாதர் சந்நிதி மேற்கு நோக்கியும், தையல்நாயகி சந்நிதி தெற்கு நோக்கியும் உள்ளன. முன் ராஜ கோபுரம் அழகாக அமைந்துள்ளது. மற்றும் பைரவர் வீரபத்திரர் கற்பகவிநாயகர், காளி முதலியோரும் அமர்ந்து காவல் புரிகின்றனர்.

உட்பிராகாரத்தில் சுவாமி சந்நிதிக்கு மேற்புறம் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமி உற்சவர் வள்ளி, தெய்வயானையுடன் எழுந்தருளியுள்ளார். இக்கோயிலில் உள்ள துர்க்கை மகிமை மிக்கவள்.

சடாயு குண்டம் ஒன்று உள்ளது. இராமர் சடாயுவைத் தகனம் செய்த இடம் என்று கூறுகின்றனர். ராமர், இலக்குமணர் சீதை விசுவாமித்திரர், வசிஷ்டர், சடாயு முதலியோர் உருவங்கள் உள்ளன. சடாயு படிமம் மிகவும் அழகாக உள்ளது. மற்றும் பல செப்புப் படிமங்கள் உள்ளன. மிகவும் சிறந்தது அங்காரகன் திருஉருவம் இங்கு அங்காரகனுக்குப் பெருமை அதிகம். இது அங்காரக க்ஷேத்திரம்.

## தல விருக்ஷம் :

கீழ்பால் தலவிருக்ஷம் வேம்பு உள்ளது. இதற்கு வேம்படி மால் என்ற பெயர் வழங்குகின்றது. வேம்படிமாலின் அடியில் ஆதி வைத்தியநாதர் எழுந்தருளியுள்ளார்.

## தீர்த்தங்கள் :

இத்தலத்தில் பதினெட்டுத் தீர்த்தங்கள் உள்ளன. பல மண்டபங்கள் உள்ளன. பழைய பல்லவ சிற்பங்களும், யாளித் தூண்களும் உள்ளன. தெற்கு பிராகாரத்திற்குத் தெற்கில் அம்மன் சந்நிதியில் சித்தாமிர்த தீர்த்தம் உள்ளது. இதில் மூழ்கினால் சகலவிதமான சரும நோய்களும் தீரும் என்பது புராண வரலாறு.

## சந்தன அபிஷேகம் :

திங்கள் தோறும் வரும் கார்த்திகைத் திருநாளில் செல்வ முத்துக்குமாரசுவாமிக்கு விசேஷ அபிஷேகம் நடைபெறும். சந்தனக்குழம்பு அபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெறும். பின்பு நவரத்தின அங்கியுடன் செல்வமுத்துக்குமாரசுவாமி காட்சி அளிப்பார். வள்ளியும், தெய்வயானையும், பச்சை, சிவப்பு அங்கிகளுடன், காட்சி அளிப்பார்கள் பல்லாயிரக்கணக்கான மக்கள் இக்காட்சியையும், அலங்காரத்தையும், அர்ச்சனையையும் தீபாராதனையையும் கண்டு பரவசமடைவர். கார்த்திகை மாதம் கிருத்திகையில் விசேஷமாகப் பஞ்சமூர்த்திகளுக்கும் அபிஷேகம் நடைபெறும். தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளியிருந்து சிறப்புற நிகழ்த்துவிப்பார்கள்.

மற்றைய நாட்களில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரரின் ஆன் மார்த்த பூஜா மூர்த்தியான ஸ்ரீ முத்துலிங்கத்திற்குத் தான் அபிஷேகம் நடைபெறும் அர்த்தஜாம பூசா காலத்தில் முதலில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு வழிபாடு நடந்த பின்னரே சுவாமிக்கு நடைபெறும். இதற்குத்தான் புழுகுகாப்பு என்பது பெயர் இப்புழுகுகாப்புக் தரிசனம்தான் இத்தலத்திற்குச் சிறப்பு மிக்கது. இரவு 9 மணி அளவில் நடைபெறும்.

செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு அர்த்தஜாம பூஜையில் சாத்தப்படுவன; நேத்திரப்பிடி சந்தனம். திருச்சாந்துருண்டை; நோய் நீங்கப்பெறும் மாத்திரை. இவ்வுருண்டைகள் கோயிலில் கிடைக்கின்றன சடாயுகுண்ட விபூதியை இட்டுக்கொண்டால் பலவிதமான பிணிகளும் நீங்கும்.

## பாடல்கள் :

இத்தலம் பற்றித் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் அருணகிரிநாதர் வடுகநாததேசிகர், தருமை ஆதீனம் பத்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீ சிவஞான தேசிகர் குமரகுருபரர் படிக்காசுத் தம்பிரான், சிதம்பர முனிவர், காளமேகப்புலவர், இராமலிங்க சுவாமிகள் முதலியோர் பாடியுள்ளார்கள்.

"வினையறுத்தான் கோயில் விளக்கழகு" என்பது பழமொழி. இம்மொழிப்படி இவ்வாலயத்தில் விளக்குகள் அதிகம். பிரம் மாண்டமான வெள்ளி விளக்குகளும் உள்ளதைக், கிருத்திகை யின்போது காணலாம்.

## கல்வெட்டுகள் :

இங்குச் சிலகல்வெட்டுக்களே உள்ளன. இவற்றுள் சில விக்ரம சோழன் காலத்தவை (1120 – 1136) தஞ்சை மன்னன் துளஸா மன்னனுடையதும் உள்ளன என்று அறிகின்றோம். விக்ரம சோழன் பல திருப்பணிகள் செய்துள்ளான். மற்றும் வீர ராஜேந்திர பாண்டியன், அச்சுதப்ப நாயக்கர் முதலியோர் திருப் பணி செய்துள்ளார்கள்.

## பிரசாதங்கள் :

கார்த்திகைத்திருநாட்களில்பிரசாதங்கள்மக்களுக்கு வழங்கப் படும். லாடு, விபூதிப்பை, சந்தனக்குழம்பு, பஞ்சாமிர்தம் முதலிய பிரசாதங்கள் விலைக்குக் கிடைக்கும்.

**உற்சவங்கள் :**

பிரம்மோற்சவம் பங்குனியில் நடைபெறும். ஐந்தாம் திருநாள் விசேஷம். செல்வமுத்துக்குமார சுவாமி செண்டு பெறும் காட்சி சிறப்பானது. செல்வமுத்துக்குமரனுக்குத் தைத் திங்களில் கடைசிச் செவ்வாய்க்கிழமையைத் தீர்த்தத் திருநாளாகக்கொண்டு திருவிழா நடைபெறும். ஸ்கந்தசஷ்டி உற்சவம் சிறப்பாக நடைபெறும்.

அங்காரக க்ஷேத்திரமானதால் செவ்வாய்க்கிழமைதோறும் மாலையில் ஆடு வாகனத்தில் அங்காரகன் எழுந்தருளி, பிராகாரத்தில் வலம் வருவார்.

அம்மையாருக்கு ஆடிப்பூரம், நவராத்திரி உற்சவங்கள் நடைபெறும்.

மாதகார்த்திகைத்திருநாட்களில்தேவாரபாராயணமும், பஜனையும் நடைபெறும். சந்தனக்குழம்பு மண்டபம் பூராவும் மக்கள் அமர்ந்து தரிசனம் செய்வார்கள்.

**கோயில் பணிகள் :**

வைத்தீஸ்வரன்கோவில் தேவஸ்தானத்தார் ஓர் சித்த வைத்திய சாலையை நடத்தி வருகின்றனர். மூலிகைகளை வளர்க்க நந்தவனம் உள்ளது. மக்கள் தங்க விடுதிகள் உள்ளன. அநாதைக் குழந்தைகளுக்கு "தையல்நாயகி அன்பில்லம்" என்ற ஓர் விடுதி உள்ளது. மற்றும் பல நற்பணிகளை இத்தேவஸ்தானம் செய்துவருகின்றது.

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

"The Sirkazhi shrine, very extensive in area and soul - stirring in its appeal is kept scrupulously clean. It is a delight of the Asthikas in the south."

(Sd.) A. Kachapakesan,
Deputy Acct. General,
Tamil Nadu, Madras.

30—5—74.

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

தருமையாதீன முதற்பெருங்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூசை விழாவை முன்னிட்டு, 1—6—74 முதல் 10—6—74 முடிய திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு வழக்கம்போல் சிறப்பாக நடைபெற்றது.

சிவபெருமானுக்குரிய முக்கண்கள்போல விளங்குவன முப்பெரும் புராணங்களாகிய கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் என்பனவாகும். சைவப் பெருமக்கள் இப்புராணங்களைப் பலகாலும் தங்கள் தங்கள் இல்லங்களிலோ அல்லது பொது இடங்களிலோ விரிவுரையாற்றச்செய்து கேட்டு மகிழ்தல் மரபு. சமய உண்மைகள், மரபுகள், தத்துவங்கள் போன்றவற்றை விளக்கும் வரலாறுகளை உட்கொண்ட இப்புராண விரிவுரைகள் அன்பர்கள் உள்ளங்களில் பக்திப் பயிர் தழைக்கப் பெரிதும் துணைபுரிவன. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள். இப்புராணங்களைத் தொடர் விரிவுரையாக நிகழ்த்தச் செய்ய வேண்டுமென்று திருவுளம் பற்றியவண்ணம் மாநாட்டில் தொடர் விரிவுரைகள் நிகழ்ந்தன.

திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (குன்றக்குடி அடிகளார் எம். எல். சி.,) அவர்களின் சிறப்புரையோடு மாநாடு தொடங்கி நிகழ்ந்தது

தொடக்கவுரையில், " தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராகக் அரசு வீற்றிருந்தருளும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவையொட்டித் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு நிகழ ஏற்பாடுசெய்துள்ளார்கள். அம் மாநாட்டின் தொடக்கத்தில் குருமுதல்வர் அருளிய பாடல் ஒன்றை நினைவு கூர்வது பொருத்தமுடையது என்று கூறி, " ஆசையறாய் பாசம் விடாய் " என்ற பாடல் விளக்கம் செய்தார்கள். மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் உலகபந்தங்களை அறுத்துப் பாசங்களை விட்டு, சிவபூசைசெய்து ஐந்தெழுத்துக்களை ஓதிச்சினம் தவிர்ந்து திருமுறைகளை ஓதி உய்யவேண்டும் என்பதைப் பல மேற்கோள்களுடன் விளக்கினார்கள். அடுத்து இம்மாநாட்டின் தொடர் விரிவுரைக்கு ஏற்ற பொருளாக அமைந்த கந்தபுராணம் தீமையை அழிப்பதற்கு எழுந்தது, பெரியபுராணம், பெருமான்

அடியவர்களை ஆட்கொள்ளும் திறத்தை விளக்க எழுந்தது. திருவிளையாடற்புராணம் எம்பெருமானின் எளிமையை விளக்க எழுந்தது என்று குறிப்பிட்டார்கள்.

அகில இந்திய வானொலி அமைப்பாளர் திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்கள் 2-6-74 ஞாயிற்றுக்கிழமையன்று நிகழ்ந்த மாநாட்டில் ஆற்றிய தம்சிறப்புரையில், 'தருமையாதீன ஞானபீடத்து எழுந்தருளியிருந்து அருள் வழங்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சிறந்த தவசீலர். ஒழுக்கமும் கல்வியும் ஆற்றலும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவர்கள்; பெறுதற்கரிய தவமுனிவர். அவர்களை என்று தொழுதாலும் பேரானந்தம் உண்டாகிறது. கோயில்களுக்கு விழா வேண்டுமா? என்று மேல் நாட்டவர்கள் கேட்டனர். அது முடிந்து இப்பொழுது நம் நாட்டவர் கேட்கின்றனர். நம் உடற்பசியைப் போக்குவது போல நம் மனத்திற்கு ஏற்படும் பசியைப் போக்கவே வழிபாட்டை நம்மவர் ஏற்படுத்தியுள்ளனர். இங்கு நிகழும் குருபூஜை விழா குருலிங்க சங்கம வழிபாட்டை விளக்குகிறது. இவற்றை எல்லாம் நாம் உணர்ந்தால் விழாக்கள் எதற்கு என்பதை நாம் உணர்வோம் என்று விளக்கினார்கள்.

தமிழ்நாடு அரசு திட்டக்குழு பொருளாதார ஆலோசகர், டாக்டர். திரு. பா. நடராசன் எம். ஏ., டி-லிட்; அவர்கள் 3-6-74 திங்கட்கிழமை மாநாட்டில் சிறப்புரையாற்றும்போது கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணங்கள் பற்றி மூன்று பெரியவர்கள் பேசஇருக்கின்றார்கள். 'புராணம்' என்பதற்குப் பழமை என்பது பொருள். இருப்பினும் பிற்காலத்தில் எழுதப்பட்டவை என்று வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். புராணங்களில் பலவகைக் கதைகளைக் காண்கின்றோம். சிறியவர்களேயன்றிப் பெரியவர்களும் கூடக் கதை கேட்பதில் பெருவிருப்பம் காட்டுகின்றனர். புராணக் கதைகள் தத்துவம் பொதிந்தவை; அடிப்படையான சமய உண்மைகள் சாத்திர உண்மைகள் இவற்றை விளக்குவன. புராணங்கள் பக்தியினால்தான் சமயம் நிலைபெறுகின்றது; புராணக்கதைகள் பக்தியை வளர்ப்பனவாக உள்ளன. சமயாசாரியர்களும் தமது பாடல்களில் புராணக்கதைகளை எடுத்துக் கூறி சமயத்தை வளர்த்துள்ளார்கள்' என்று கூறினார்கள்.

தூத்துக்குடி திரு. வை ஆறுமுகம் அவர்கள் 4—6—74 செவ்வாய்க்கிழமை நிகழ்ந்த மாநாட்டில் சிறப்புரையாற்றுகையில், தமிழ் காலத்தால் மூத்தது. அத்தமிழைப் பாடிய மாணிக்கவாசகர், தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்

உவர்க்கும் இறைவா போற்றி' என்று பாடியுள்ளார். யுனைடெட் ஸ்டேட்டில் பல இடங்களிலே சிவலிங்க உரு கிடைக்கின்றது. ஜப்பான் தேசத்தில் சிவலிங்கவழிபாடு இருந்தது. தற்பொழுதும் அங்கே கிராமங்களில் சிவலிங்கங்கள் இருப்பதைக் காணலாம். சிந்துவெளி நாகரீகத்தில் மொகஞ்சதோராவில் கிடைப்பவற்றால் ஆதிமனிதன் சிவலிங்கவழிபாடு செய்தான் என்பதை உறுதியாக நம்பலாம்' என்பவற்றைக் கூறி சைவசமயத்தைப் பற்றியும் சிவவழிபாட்டின் தொன்மை பற்றியும் விளக்கினார்கள்.

6—6—74 வியாழக்கிழமை நிகழ்ந்த மாநாட்டில் சென்னை உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி திரு. R. சதாசிவம், B.A.,B.L. அவர்கள் சிறப்புரை வழங்குகையில் சிவபிரானுக்குரிய முக்கண் போல விளங்கும் புராணங்களாகிய கந்தபுராணம், திருவிளையாடல் பெரியபுராணங்களை அன்பர்களை ஓதச்செய்து கேட்பது மிக்கப் பலனைத் தருமென்றும், மக்கள் சமய உணர்வும், பக்தி உணர்வும் உடையவர்களாக விளங்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள்.

7—6—74 வெள்ளிக்கிழமையன்று நிகழ்ந்த மாநாட்டில், தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு புலவர், திரு. கா. கோவிந்தன் அவர்கள் வழங்கிய சிறப்புரையில் உலகில் சிறந்த பிறப்பு மக்கட் பிறப்பு. பிறப்பினால் மக்களாக விளங்குதல் மட்டும் போதாது. 'உயர்திணையென்மனார் மக்கட் சுட்டே' என்று தொல்காப்பியர் கூறுவதுபோல மக்களென்று கருதப்படும் நிலையிலும் மனிதனாக வாழவேண்டும். உறுப் பொத்தல் மக்கள் ஒப்பன்றால் என்பது குறள். மனிதன் மக்கட் பண்புகளோடு வாழவேண்டும் என்றுகூறி எனக்கு இந்தக் கூட்டமும், அவையும் மகிழ்ச்சியைத்தருகிறது. 'உடையாளுன் றன் நடுவிருக்கும்' என்ற பாடலில் மணிவாசகர் சொல்வதுபோல இத்திருக்கூட்டத்தினிடையே நான் பேசுவதைப் பெருமையாகக் கருதுகிறேன் என்று குறிப்பிட்டார்.

சென்னை ஆங்கீரச திரு. சு. வேங்கடேச சர்மா அவர்கள் கந்தபுராணம் பற்றி "புண்ணிய முனிவரும் புராணத் தோற்றமும்", "பார்வதி திருக்கல்யாணம்", "பிறவா முருகன் பிறந்த அற்புதம்", "தாரக கிரௌஞ்சவதம்", "அசுரர் பிறப்பும் அமரர் அல்லலும்", "பானுகோபன் சிங்கமுகன் வதம்", "சூரசம்காரம்", "தக்ஷயாகமும் சிவபரத்துவமும்", "தெய்வயானை வள்ளி திருமணம்" என்ற தலைப்புக்களில் விரிவுரையாற்றினார்கள். திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரிப் பேராசிரியர், திரு. இரா. இராதாகிருஷ்ணன் அவர்கள் பெரியபுராணம் பற்றி, பேயும்

பித்தனும் என்ற தலைப்பில் "காரைக்காலம்மையார்" வரலாற்றையும், வேரித்தாரன் என்ற தலைப்பில் "இளையான்குடிமாற நாயனர் வரலாற்றையும்", தொழுதுவென்றுர் என்ற தலைப்பில் "மெய்ப்பொருள் நாயனர்" வரலாற்றையும், தனிவீரர் என்ற தலைப்பில் "ஏனுதி நாயனர்" வரலாற்றையும், சிறிய பெருந்தகையார் என்ற தலைப்பில் "சண்டேசுவர நாயனர்" வரலாற்றையும் ஒருநம்பி என்ற தலைப்பில் "அப்பூதியடிகள்" வரலாற்றையும், பாலும் சூலையும் ஓலையும் என்ற தலைப்பில் "சம்பந்தர், அப்பர், சுந்தரர்" வரலாறுகளையும் விளக்கி விரிவுரையாற்றினுர்கள்.

5—6—74 அன்று மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், டாக்டர், திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ. பி. எச். டி., அவர்கள் அன்புருவாயினுர் என்ற தலைப்பில் "கண்ணப்பர்" வரலாற்றையும், 6 6-74 அன்று திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர், வித்துவான், திரு. சு. சுந்தர மூர்த்தி அவர்கள் புலைபோய் முனியானவர் என்ற தலைப்பில் "திருநீலகண்டர்" வரலாற்றையும் விளக்கி விரிவுரையாற்றினார்.

யாழ்ப்பாணம் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம், ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் திருவிளையாடற் புராணம் பற்றி "மீனுட்சியம்மை திருக்கல்யாணம்" "கால்மாறி ஆடிய கபாலி" "தெய்வநீதி", விறகு வித்த விண்ணவன் ", "விருத்த குமார பாலரான வித்தகன் ", " தருமிக்குப்பொற்கிழி", "வந்தியும் நந்தியும்", "பாண்டியன் சுரம் தீர்த்தது" என்ற தலைப்புக்களிலும், 10—6—74 அன்று "சிவலிங்க சாட்சி" என்ற தலைப்பிலும் தக்கபக்க வாத்தியங்களுடன் இன்னிசைச் சொற்பொழிவாற்றினுர்கள். 5—6—74 அன்று திருமதி. ப. நீலா அவர்கள் "இசைவாது" என்ற தலைப்பில் விரிவுரையாற்றினுர்கள்.

11—6—74 செவ்வாய்க்கிழமை பட்டணப்பிரவேசத் திருநாள் காலை 8 மணி அளவில் விரிவுரை தொடங்கியது. திருக்குறள் வேள், திரு. ஜி. வரதராஜப் பிள்ளை பி. ஏ., அவர்கள் "திருமந்திரம்" பற்றியும், மதுரை, புலவர் திரு. தா. குருசாமி அவர்கள் ஆதீன முதற்குரவர் 'ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாறு" பற்றியும் விரிவுரை நிகழ்த்தினர்.

அன்றுமாலை 5-30 மணி அளவில் சமயப்பயிற்சி வகுப்பின் நிறைவுவிழா நிகழ்ந்தது. சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி, மாண்புமிகு திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் பி. ஏ., பி. எல். அவர்கள் சிறப்புரையாற்றினுர்கள். சிறப்புரையில் 'சமயப்பயிற்சி

இக்கால இளைஞர்களுக்கு அளிக்கவேண்டியதன் இன்றியமையாமையையும், காலநிலை நாட்டு நிலைகளுக்கு ஏற்பத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சமயப்பயிற்சி வகுப்பை நிகழ்த்தி மக்களை நல்வழிபடுத்துகின்றார்கள் எனவும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளத்திற்கேற்ப நன்னெறியோடு சமயம் வளர்ச்சிபெறப் பாடுபடுவதே சமயப் பயிற்சி பெற்றதன் பயன் என்றும் கூறினார்கள். சென்னை திரு. நல். முருகேச முதலியார் அவர்கள் 'சங்கற்ப நிராகரணம்' என்ற தலைப்பில் விரிவுரையாற்றிய பின்னர், சீகாழி கோவிந்தராசன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியோடு மாநாட்டு நிகழ்ச்சிகள் நிறைவுற்றன. மாநாட்டு நிகழ்ச்சிகளிலும், இன்னிசை நிகழ்ச்சியிலும் அன்பர்கள் பலர் கலந்துகொண்டு கேட்டுப் பயன் பெற்றனர்.

## சமயப்பயிற்சி வகுப்பு

தருமையாதீனம் குருபூசை விழாவை முன்னிட்டு 1—6—74 முதல் 11—6—74 முடிய சமயப்பயிற்சி வகுப்பு சிறப்பாக நடத்தப்பெற்றது. தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் புலவர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் சைவ அன்பர்கள் முப்பத்தைந்துபேர் பயிற்சியில் கலந்துகொண்டனர்.

1—6—74 காலை 11 மணியளவில் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சமயப்பயிற்சி வகுப்பைத் தொடங்கிவைத்து அருளாசி வழங்கினார்கள்.

காலை மாலை இருவேளைகளிலும் நாடோறும் நான்கு மணி நேரம் நிகழ்ந்த சமயப்பயிற்சி வகுப்பிலும் இரவு நிகழ்ந்த மாநாட்டு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு விரிவுரைகளைக் கேட்டு சமயப் பயிற்சி பெற்றனர். தருமை ஆதீனப் புலவர், மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் சந்தானாசாரியர்களில் நான்காமவராகிய ஸ்ரீ உமாபதி தேவ நாயனர் அருளிய சித்தாந்த அட்டகத்தில் ஒன்றாகிய 'சிவப் பிரகாசம்' என்ற நூல்பற்றிய விரிவுரையையும், திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி முதல்வர் திரு கு. சுந்தரமூர்த்தி எம்.ஏ. அவர்கள் சந்தானாசாரியர்களில் இரண்டாமவராகிய ஸ்ரீ அருணந்தி தேவ நாயனர் அருளிய சிவஞான போதத்தின் விளக்க நூலாகிய 'சிவஞான சித்தியார்' என்ற நூல்பற்றிய விரிவுரையையும் நிகழ்த்தினர். " வேதம், ஆகமம், இதிகாசம், புராணம், பத்ததிகள், அறுவகைச் சமயங்கள், கல்வெட்டுக்களில் சமயப்

பணிகள் சங்க நூல்களில் சமயங்கள், திருமுறை" நீதி நூல்கள் என்ற தலைப்புக்களிலும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய ஞான நூல்கள், ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள், ஸ்ரீ குமரகுருபரர், ஸ்ரீ சிவஞான முனிவர், படிக்காசு முனிவர், ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் ஆகியோர் இயற்றிய பிரபந்த நூல்கள் பற்றிய விரிவுரைகளும் நிகழ்த்தப்பெற்றன. பயிற்சியாளர்களுக்குத் தேர்வு முறையில் கட்டுரைகள் எழுதச்செய்து சான்றிதழ்கள் வழங்கப்பெற்றன. பயிற்சியாளர்களுக்கு, 1—6—74 முதல் 11—6—74 முடிய இலவசமாக உண்டி உறையுள் முதலிய வசதிகள் செய்து தரப்பெற்றன.

---

<u>கடிதம் :</u>

'செந்தமிழ்ச் சைவமணி' — சென்னை, 34.
'சித்தாந்தப் புலவர்மணி' — 13—6—74.

புலவர், ந.ரா. முருகவேள் M. A., M. O. L.;
ஆசிரியர் : திருக்கோயில்.

' தருமை ஆதீனத் தமிழ்ப்புலவர் '
பட்டம் பெற்றதைக் குறித்த

## நன்றி வணக்க மடல்

அறவேர் எனும்சண் முகதே சிக! நல் அருட்கடலே!
'உறவேல் ஒழிக்க ஒழியாத வண்ணம்' உவந்தருளி
நெறியே எனையும் நினைந்தாண்டு கொண்டனை; நின்கருணை
மறவேன்; இயன்றுள தொண்டெலாம் செய்வேன்; வணங்குவனே.

## நன்றி - அன்பின் இறைஞ்சி உய்வேன்

அருமைமிகு சண்முகதே சிகபரமா சாரியராம் ஆன்ற சான்றோய்!
'தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர்' பெருங்குழுவிற் சார வைத்தே,
உரிமைமிக வழங்கிஎனை உவந்தாண்டு கொண்டனை; நின்
[உயர்ந்த உள்ளம்
எழுமைஎழு பிறப்பினிலும் யான்மறவேன்; நன்றிஅன்பின்
[இறைஞ்சி யுய்வேன்!

# செய்திகள்

## தருமை ஆதீனத்தில்
## ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் பெருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் 1—6—74 சனிக்கிழமை முதல் மகோற்சவம் தொடங்கி நடைபெற்றது. 1—6—74 அன்று கொடியேற்றமும், 5—6—74 அன்று இடப வாகனக் காட்சியும், 7—6—74 அன்று திருக்கல்யாணக் காட்சியும் மின் விளக்குகளால் ஒப்பனை செய்யப்பெற்ற வெள்ளியிரதத்தில் வீதியுலாவும், புஷ்பவிமானக் காட்சியும், 9—6—74 அன்று திருத்தேர்த் திருவிழாவும், 10—6—74 அன்று திருமடாலயத் திற்கு எதிரிலுள்ள திருக்குளத்தில் ஸ்ரீ நடராஜப் பெருமான் தீர்த்தங்கொடுத்தருளலும், காவிரியில் பஞ்சமூர்த்திகள் தீர்த்தங் கொடுத்தருளலும், இரவு கொடியிறக்கமும் நடைபெற்றன. திரு விழா நாட்களில் காலை மாலை இருவேளைகளிலும் சிறந்த நாதசுர இன்னிசை நிகழ்ச்சிகளும், தக்க பக்கவாத்தியங்களுடன் திரு முறை வாணர்களால் திருமுறைப் பாராயணமும், வேத சிவாகம பாராயணமும் நிகழ்ந்தன. மகோற்சவத்தை முன்னிட்டு கிழக்கு வடக்கு திசைகளில் சிறந்த வேலைப்பாட்டுடன் கூடிய மண்டப அமைப்பில் செய்யப்பெற்ற முகப்புக்கள் விழாப் பந்தலை அழகு செய்தன. அங்கே செய்யப்பட்ட மின்விளக்கு வேலைப்பாடுகள் அழகுக்கு அழகு செய்வனவாக இருந்தன. மகோற்சவ நாட் களில் ஆதீனமடாலய முகப்பில் உள்ள திருநெறிய தெய்வத்தமிழ் மாநாட்டு மேடையில் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு சிறப்புற நிகழ்ந்தது.

## குருபூஜை விழா

10—6—74 திங்கட்கிழமை ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா. அன்று ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கநாதபெருமான் சந்நிதியில் மலர்களால் பந்தல் அமைத்து அழகு செய்யப்பெற்றிருந்தது. சிறந்த நாதசுர இன்னிசைகள் முழங்கின. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர் களால் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. காலை 11 மணி அளவில் தீபாராதனைகள் நடைபெற்றன. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார

சுவாமித் தம்பிரான் சுவாமிகள் வழிபாட்டில் கலந்துகொண்டு வழிபட்டுப் பிரசாதம் பெற்று மகிழ்ந்தார்கள்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவை முன்னிட்டு ஸ்ரீ ஞானபுரீசுவரருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. ஸ்ரீஞானபுரீசுவரப்பெருமானுக்குப் பஞ்சமுகார்ச்சனையும், ஸ்ரீ ஞானாம்பிகை அம்பாளுக்கு நவசக்தியர்ச்சனையும் நிகழ்த்தப்பட்டன. மாயூரம் முதலிய இடங்களிலிருந்தும் மற்றும் பல வெளியூர்களிலிருந்தும் அன்பர்கள் பலர் வந்து வழிபாட்டில் கலந்துகொண்டு வழிபட்டு மகிழ்ந்தனர். வழிபாட்டின்போது ஆதீன ஓதுவாமூர்த்திகள் பண்ணிசையுடன் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தினார்கள். சங்கீதபூஷணம் திரு. பி. சுவாமிநாதன் அவர்கள் பஜனைப் பாடல்களைப் பாடினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபாட்டிற்கு எழுந்தருளியிருந்து வழிபட்டு, திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளுக்கும், அன்பர்களுக்கும் பிரசாதம் வழங்கியருளினார்கள்.

பின்னர், அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி ஆலயத்திற்கும், ஸ்ரீ தர்மபுரீசுவரசுவாமி ஆலயத்திற்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றித் திருமடத்திற்கு எழுந்தருளினார்கள். நண்பகல் மாகேசுவர பூசை சிறப்புற நிகழ்ந்தது.

## குருமூர்த்த தரிசனம்

10—6—74 குருபூஜை விழாவன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காலை 6 மணி அளவில் மேலக்குருமூர்த்தங்களுக்கும், மாலை 7 மணி அளவில் திருமஞ்சனவீதியில் உள்ள குருமூர்த்தங்களுக்கும் நாதசுர இன்னிசை, எடுபிடிகள், வாணவேடிக்கைகள் முதலியவற்றுடன் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். அன்று குருமூர்த்தங்களுக்குச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப்பெற்றன. குருமூர்த்த வழிபாட்டிற்குப் பின்னர், ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி, ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி திருக்கோயில்களில் வழிபாடாற்றித் திருமடத்திற்கு எழுந்தருளினார்கள். குருமூர்த்த வழிபாட்டின்போது அன்பர்களும், பெருமக்களும் பக்தர்களும் சென்று வழிபட்டுப் பிரசாதம் பெற்று மகிழ்ந்தனர்.

## ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் சிறப்பு வழிபாடு

10—6—74 அன்று இரவு ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு சிறப்பு வழிபாடு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களால் நிகழ்த்தப்பெற்றது. பாவனாபிஷேகம், திருமெய்ஞ்ஞானம் நிவே

தனம்செய்து ஆராதனைகள் நிகழ்த்தி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளியபின்னர் கொலுவீற்றிருந்து அருட்காட்சி வழங்கியருளினார்கள்.

திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் கொலுவழிபாடு நிகழ்த்தினார்கள். வழிபாட்டிற்குப் பின்னர் ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும், அன்பர்களும், பக்தர்களும், பெருமக்களும் வழிபட்டுப் பிரசாதம் பெற்று உய்த்தனர்.

## பட்டமளிப்பும் பாராட்டும்

தருமையாதீனம் கலைஞர்களைப் பன்னெடுங்காலமாகப் பட்டங்கள் வழங்கியும், பொன்னாடைகள் போர்த்தியும், பரிசுகள் வழங்கியும் ஆதரித்து வருவதை அனைவரும் அறிவர்.

தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூசை விழாவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இந்த ஆண்டில் திருமுறைப் பண்ணிசையிலும், தமிழ்த் துறையிலும், இசைத் துறையிலும், சிறந்து விளங்கும் புலவர்களைத் தருமையாதீனப் புலவர்களாக்கிப் பொன்னாடைகள் அணிவித்து ஆசி வழங்கினார்கள்.

10-6-74 குருபூசை விழா அன்று ஸ்ரீசொக்கநாதப்பெருமான் பூசைமடத்தில் வழிபாட்டின்போது தேவார இசைமணி திரு. பி. சுவாமிநாதன் அவர்கட்குத் தருமையாதீனப் பண்ணிசைப் புலவர்" என்ற பட்டத்தையும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், துணைப்பேராசிரியர், திரு. க. வெள்ளைவாரணனார், சென்னை திருக்கோயிலாசிரியர் திரு. ந. ரா. முருகவேள், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர் திரு. வி. சா. குருசாமி தேசிகர், அன்பநாதபுரம்வகையார் அறத்துறைக்கல்லூரி விரிவுரையாளர் திரு. சொ. சிங்காரவேலன், திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி முதல்வர் திரு. ஞ. சுந்தரமூர்த்தி, தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர் திரு. வி. சபேசன் ஆகியோர்கட்குத் "தருமையாதீனத் தமிழ்ப்புலவர்" என்ற பட்டத்தையும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கியருளினார்கள்.

11—6—74 பட்டணப்பிரவேசத் திருநாளன்று ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாட்டின்போது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சீகாழி திரு. எஸ். கோவிந்தராசன் அவர்கட்குத் "தருமையாதீன இசைப்புலவர்" என்ற பட்டம் வழங்கி வாழ்த்தியருளினார்கள்.

## மதுரையில் ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாடு

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுர ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞானபீடம் அமர்ந்த பின்பு தமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப்பெருமானைத் தரிசிப்பதற்கு முதன் முறையாக மதுரைக்குத் தருமையிலிருந்து, 26—5—74 ஆம் நாளன்று காலை எழுந்தருளினர்கள். காலை 11 மணியளவில் வடக்குமாசி வீதியிலுள்ள தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்திற்கு எழுந்தருளினர்கள். திருமடத்தில் புலவர். திரு. தா. குருசாமி தேசிகர் திருவாளர்கள். எஸ். எஸ். கிட்டப்பா, தியாகராஜன், ராஜாராமன், தி. சு. கோவிந்தசாமி, சி. சுப்பிரமணியபிள்ளை, புலவர். சுந்தரராமன் முதலியவர்களும் மற்றும்பல மெய்யன்பர்களும், வரவேற்று வணக்கம் தெரிவித்துக்கொண்டனர். திருக்கோயிலின் சார்பில் அறங்காவலர் குழுத்தலைவர் திரு. லெ. நாராயணன் செட்டியார், நிர்வாக அதிகாரி திரு. எஸ். எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் கோயில் விருதுகளுடன் வரவேற்றனர். திருமடத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் கொலுவிற்றிருக்கும்போது திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் கொலுவழிபாடு நிகழ்த்தினர்கள். அன்பர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பிரசாதம் வழங்கி உச்சிக்கால வழிபாட்டிற்காக, ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு எழுந்தருளினர்கள்.

திருக்கோயிலின் முன்பு பூர்ணகும்ப மரியாதைகளுடன் அறங்காவலர்களும், அறங்காவலர் குழுத்தலைவரும், துணை ஆணையரும், நிர்வாக அதிகாரியும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்றனர். பெரும்பொருட்செலவில் அம்பாளுக்கும் சுவாமிக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துப் பரிவட்டங்கள் அணிவித்துத் தமது ஆன்மார்த்த மூர்த்தியினை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கித் திருமடத்திற்கு எழுந்தருளினர்கள்.

அன்று மாலை 7 மணியளவில் திருக்கோயில் திருக்கல்யாண மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கட்குத் திரு. லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் தலைமையில் வரவேற்பு விழா நிகழ்ந்தது. திரு. ம. க. சுந்தரேசப்பட்டர் விழாக்குழுவின் சார்பில் வரவேற்றுப் பேசினர். தலைவர் தமது உரையில் தருமையாதீனத்தின் சிறப்பையும், ஆதீனத்தில் சைவத்தமிழ்ப்

பணி செய்துவரும் மாண்பையும் குறிப்பிட்டு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் தொண்டுகளையும் விளக்கிப் பேசினர். வரவேற்புக் குழுவினர் சார்பில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கட்குத் திரு. பொன்னப்பன் பொன்னுடையையும் மாலையை யும் அணிவித்து மகிழ்ந்தார். சைவசித்தாந்தசபை, பன்னிரு திருமுறை மன்றம், திருவள்ளுவர் கழகம், ஆண்டாள் இசைப் பள்ளி, திருப்புகழ்ச்சபை, லாலா சத்திரம் தொண்டைமண்டல வேளாளர் சங்கம், திருநெல்வேலிச் சைவ வேளாளர் சங்கம், மதுரை நகர் சிவாசாரியர் சங்கம் ஆகியவற்றின் சார்பில் வரவேற் புரைகள் வாசித்து அளித்து மாலைகள் அணிவிக்கப்பட்டன.

நகர் மக்கள் சார்பில் திரு. கி. பழநியப்பன் அவர்களும் திரு அ. சங்கரநாராயணன் அவர்களும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களை வரவேற்றுப்பேசி வணக்கம் தெரி வித்துக் கொண்டனர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளுரை வழங்கி உரையாற்றும்போது, மதுரைக்கும் தருமைக் கும் உள்ள தொடர்புகளை விவரித்து, சைவம் வளர்த்த மதுரை நகரில் சம்பந்தர் காலத்தில் நடந்த அற்புத நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டி, தற்காலத்தில் சிந்தனைத் திறன் குறைந்திருப்ப தால்தான் நாட்டில் குழப்பநிலையேற்பட்டிருக்கின்றது என்றும் குறிப்பிட்டு, இறைஉணர்வு மக்களிடம் நிறைந்து விளங்கினால் துன்பம் ஒழியும் என்றும் அறவுரை கூறி, வரவேற்றும் பாராட்டுரை வழங்கிய மெய்யன்பர்களுக்கும், அறங்காவலர் களுக்கும், மதுரை மக்களுக்கும் ஆசி வழங்கினார்கள். செயலர் திரு. தி. சு. கோவிந்தசாமி அவர்கள் நன்றி கூறியவுடன், மங்கல வாழ்த்தோடு வரவேற்பு விழா வைபவம் இனிது நிறைவுற்றது.

இரவு 9 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயிலுக்கு மீண்டும் எழுந்தருளி அம்பாளுக்கு விசேஷ நவசக்தி அர்ச்சனையும், திரிசதி அர்ச்சனையும் செய்வித்து வழிபாடாற்றி, ஸ்ரீ சோமசுந்தரப் பெருமானுக்கும் விசேஷ பஞ்சமுக அர்ச்சனைகள் செய்வித்து வழிபட்டு அர்த்த யாம தரிசனம் செய்துகொண்டு திருமடத்திற்கு எழுந்தருளினார் கள். "மதுரைத் திருப்பதிகங்கள்" என்னும் நூல் வெளியிடப் பட்டு முதல் வழிபாட்டு நினைவாக அன்பர்கட்கு வழங்கப்பட்டது. மதுரைத் திருக்கோயிலின் கும்பாபிஷேகத்திற்காக ரூபாய் 12,501 அருட்கொடை வழங்கினார்கள். திருக்கோயில் வழி பாட்டிற்கு அறங்காவலர்களும் அறங்காவலர் குழுத் தலைவர் லெ. நாராயணன் செட்டியார் அவர்களும், துணையாணையர், திரு. எம். ஏ. முருகேசன் அவர்களும், நிர்வாக அதிகாரி திரு. என். எஸ். இராமச்சந்திரன் அவர்களும் தக்க ஏற்பாடு செய்திருந்த னர். திருக்கோயில் பணியாளர்களுக்கும் சிவாசாரியர் முதலியவர்

கட்டும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் திருக்கை வழக்கமும் புத்தாடைகளும் வழங்கித் தருமையாதீனத்திற்கு எழுந்தருளினார்கள்.

## சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

22—5—74 வேலூர் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா திரு. க. சுப்பிரமணிய அய்யர், (Post-master, Mount Road South) அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நிலையத் தேவாரத் திருமுறை ஆசிரியர் திரு. சு. ஞானப்பிரகாசம், வித்துவான் திரு. ந. இராமலிங்கம் குழுவினர் வேலூர் தேவாரம், திருப்புகழ், நாமாவளி, பாராயணம் நிகழ்த்தினர். தலைவர் தமது உரையில், தற்போதுள்ள பரபரக்கும் உலகில் மக்கள் மன அமைதியைப் பெற பல வழிகளைக் கையாண்டும் பயனில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் சரியான பாதையான இறை வணக்கத்தைக் கடைப்பிடிக்கத் தவறிவிடுகிறார்கள்.

மக்கள் செம்மையான வாழ்வு வாழ, நலம் பெற்று வாழ்க்கையைச் சரிவர நடத்தவேண்டுவதற்கேதுவாய் நமது தருமை ஆதீனம் நம்மீது பெருங்கருணைகொண்டு இம்மாதிரியான சமய விழாக்களை சுமார் இருபத்தொரு ஆண்டு காலமாக நடத்தி வருகிறது என்றும், இவ்வாய்ப்பினைச் சென்னைவாசிகள் இன்னும் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும் கூறினார்கள். வித்துவான், ஸ்ரீமத். மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறியபின்னர் விழா இனிது நிறைவுற்றது.

## மாதாந்தர சமயப்பிரசார விழா

26—5—74 ஞாயிறன்று நிலைய அன்பர்களின் மாதாந்தர சமயப் பிரசார வழிப்பாட்டுக் கூட்டம், சென்னை நுங்கம்பாக்கம் மகாலிங்க புரத்திலுள்ள ஸ்ரீ நவநிதி செல்வவிநாயகர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகளுக்குப் பிறகு சமயப்பிரசாரக் கூட்டம் திரு. V. N. ஆறுமுக முதலியார் B com F. C. A. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. சோ. கிருஷ்ணன் மக்கள் தங்கள் வாழ்க்கையில் வாய்மையைக் கடைபிடித்தால் எல்லா நலன்களையும் பெறலாம் என்று கூறினர். குமாரி கௌரி, பெரியபுராணம் பற்றிப் பேசினர். தலைவர் இது ஒரு நல்ல நாளென்றும், இம்மாதிரியான கூட்டு வழிபாட்டைச் சிறந்தமுறையில் நடத்திவரும் தருமையாதீனத்திற்கு நாம் எல்லோரும் கடமைப்பட்டுள்ளோம் என்றும் கூறினர்கள். பின்னர் இறை வணக்கத்துடன் விழா இனிது நிறைவுற்றது.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

திரு. K. முத்துஜோதிடர்

( ஆனந்தஸு ஆனிமீ 1உ முதல் 32உ முடிய )

( 15—6—74 முதல் 16—7—74 முடிய )

ஆனந்த வருஷம் வைகாசிமீ 31உ சுக்கிரவாரம் இரவு உதயாதி முதல் 59 நாழிகை 6 விநடிக்கு ஸ்ரீ லோகரக்ஷகரான சூரியபகவான் உலகக்ஷேமத்தின் பொருட்டு விருஷப லக்னத்தில் உதயகாலத்தில், மிதுன சங்கிரமணமாக ஆனிமாத பிரவேசம் செய்கிருர். அதன் பலன் உலகெங்கும் பிரஜைகளுக்குச் சுகவாழ்வு நடத்தி வரவும், தர்மஸ்தாபனங்கள் தேவாலய, மடாலய ஆசாரிய பீடங்கள் ஓங்கவும், ஆஸ்திக புத்தி ஓங்கி சஸ்ய விருத்தி தான்ய விருத்தி காரியங்களில் ஒத்துழைத்துப் பாடுபடும்படியான சத்புத்தி ஏற்பட்டும் ஒத்துழைப்பார்கள். சாதுக்கள் ரக்ஷிக்கப்படுவார்கள். தர்மம் ஓங்கும், தக்ஷிண பாரதமும், தர்ம பூமிகளும் ஓங்கும். எங்கும் சுபிக்ஷ சூசனை ஏற்படும்,

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். விவகாரம் ஜெயிக்கும். குடும்பத்தில் சுபமான காரியங்கள் நடந்துகொண்டு இருக்கும். எதிர்பாராத சில நன்மைகள் உண்டாகும். மேலோர் பெரியோர் அன்பு கிடைக்கும். குடும்பம் ஓங்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும், மிச்ரபலனைத் தரும். வரவு செலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும். ஆரம்பித்த காரியங்கள் விக்னத்தோடு பூர்த்தியாகும். அடிக்கடி அலைச்சல்களை உண்டுபண்ணும். ஜீவன விஷயத்தில் கொஞ்சம் தாமதம் ஏற்படும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். ஜீவனத்தில் பலவிதமான மாறுதல்கள் ஏற்படும். எதிர் பார்த்து நடைபெருத சில காரியங்கள் நடைபெறும். வீண் அலைச்சல்கள் ஏற்படும். வியாதி குணமடையும். புதன், வியாழன் சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். வரவு, செலவு சமமாக இருந்து கொண்டு இருக்கும். சச்ய தான்யங் கள் விருத்தியாகும். குடும்பத்தில் சில கவலைகள் ஏற்படும். எதிர்பாராத சில இடையூறுகள் உண்டாகும். தூரதேச சஞ்சாரம் ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். புதிதாக வஸ்திராபரணங்கள் சேரும். தனதான்யம் விருத்தியாகும். மனதிற்கு சந்தோஷம் உண்டுபண்ணும். எல்லாக் காரியங் களையும் சுலபமாகவே சாதிக்க முடியும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். விவகாரம் ஜெயிக்கும். உலகத்தில் பிரசித்தி ஏற்படும். தெய்வசக்தி ஓங்கும். குடும்பத்தில் சுபமான காரியங்கள் நடந்துகொண்டு இருக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்,

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். உத்தியோகத்தில் உயர்பதவி கிடைக்கும் வம்சம் விருத்தி யாகும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். படிப்பு விருத்தி யாகும், நினைத்த காரியங்கள் எல்லாம் சுலபமாக சாதிக்க முடியும். வியாழன், வெள்ளி சுபமாகும்,

8. விருச்சிகம் - விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். தொழில் சம்பந்தமாய் அதிகமான தொந்தரவுகள் ஏற்படும். பொருளாதாரத்தில் கொஞ்சம் குறைவு காட்டும். மேலோர்

பெரியோர்களின் பலத்தினால் சகலமும் சாத்தியமாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும், மிச்ரமான பலனைத் தரும். வரவு செலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும். சகல காரியங்களும் கொஞ்சம் தவக்கத்துடன் நடக்கும், ஜீவன விஷயமாக அடிக்கடி மாறுதல்கள் ஏற்படும், திங்கள், செவ்வாய் சுபமாகும்.

10. மகரம்-உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். புதிதாக சில சொத்துக்கள் வந்து சேரும், விவகாரம் ஜெயிக்கும். சஸ்ய தான்யங்கள் விருத்தியாகும். நினைத்த காரியங்கள் நடக்கும், உலக பிரசித்தி ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் –பூரட்டாதி–$\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். ஸ்திர சுகஜீவனம் ஏற்படும். குடும்பத்தில் சுபமானகாரியங்கள் நடந்துகொண்டு இருக்கும். புத்திராதிகளால் சந்தோஷம் ஏற்படும். குடும்பம் ஓங்கும். வெள்ளி, சனி சுபமாகும்,

12. மீனம் – பூரட்டாதி $\frac{1}{4}$ – உத்திரட்டாதி – ரேவதி

மீனராசி 9 பாதங்களும், மிச்ரமான பலனைத் தரும். வரவு செலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும். விவசாயக் காரியங்கள் கொஞ்சம் தவக்கத்தோடு நடக்கும். அடிக்கடி அலைச்சல்கள் ஏற்படும், தெய்வபலம் பிரகாசிக்கும். மேலோர் பெரியோர்களின் அன்பினால் சகலமும் சுபமாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

குறிப்பு :- டை சுக்கிரவாரம் இரவு 55 நாழி 39 வினாடிக்கு தியாஜ்ஜியம் ஏற்பட்டு கடைசியில் ஸ்வல்ப சம்பந்தமிருப்பதால், உலகில் அங்காங்கே பருவ மழைகள் தவக்கப்படும், ஜலக் குறைவு காட்டும். அந்தந்த தேசங்களில் துர்ப்பிக்ஷ நிவாரணமாக அன்ன பூர்ணாஹோமமும், லக்ஷம் கோடி அர்ச்சனைகளும் செய்துகொண்டுவர சுபிக்ஷம் உண்டுபண்ணும். சுபமாகும்.